உண்மை விளக்கம்



முனைவர்
மு. பழநியப்பன்

உண்மை விளக்கம்

முனைவர் மு. பழனியப்பன்

கலைஞன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்,
சென்னை – 600 017.

Rs. 48

UNMAI VILAKKAM
By
Dr. M. Palaniyappan

First Edition : 2014

Published by
KALAIGNAAN PATHIPAGAM
19, Kannadhasan Salai
T. Nagar, Chennai - 600 017.
Ph : 044 - 2434 5641, 2431 3221.

Typeset by
Saguram Graphics,
Chennai - 600 024.

Printed at
M.K. Graphics,
Chennai - 600 021.

பதிப்பாசிரியர்கள் உரை

உலகில் செம்மொழி என்று சிறப்பிக்கப்படும் தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கம், சீனம், எபிரேயம், ஹீப்ரு, லத்தின் ஆகியவற்றில் சிறப்பு மிக்க இலக்கிய நூல்கள் இன்றவும் மக்களிடையே நிலைத்து நிற்பன. இத்தொன்மையான செம்மொழிகளில் தமிழ்மொழியின் பேச்சு, எழுத்து வழக்கு ஆகிய நிலைகளை இழக்காது பழமையையும் பாதுகாத்துப் புதுமையையும் போற்றி உலக மொழிகளிடையே தன் பெருமையையும் புகழையும் இன்றுவரை நிலைநாட்டி வருகிறது. பிற செம்மொழிகளுக்கு இல்லாத தகுதியைத் தமிழ் பெற்றுள்ளதற்கு இதுவே காரணம்.

தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் தொடங்கி இன்று வரையிலான இலக்கியங்கள் பாடுபொருளைத் தமிழர்தம் வாழ்வியல் நெறியிலிருந்தும், அவர்தம் நாகரிகப் பண்பாட்டுப் பின்னணியிலிருந்தும் தொடர்ச்சியான பாதையில் இயங்கிக் கொண்டு வந்துள்ளன. அக்கால இலக்கியத்தை அதன் செம்மாந்த நடையை இலக்கிய நயங்களை இன்றும் படித்தும் சுவைத்தும் அதன் அழகியலில் தோய்ந்தும் இன்புறமுடிகிறதெனில் அதற்குத் தமிழின் இலக்கிய இலக்கண வளத்தின் செழுமையே காரணமாகும்.

சங்க இலக்கியம் அகம், புறம் என்ற பாடுபொருள் தமிழர்க்குரியது எனினும், அது இன்றளவும் தொடர்ச்சியாக இலக்கியத்தில் வெவ்வேறு கோணங்களில் சொல்லப்பட்டு வந்துள்ளது. காலங்கள் பல கடந்தாலும் அந்தப் பாடுபொருள் இன்றளவும் தமிழ் இலக்கியத்தின் உயிர்ப்பாக விளங்கி வருகிறது. உலக இலக்கியத் தளத்திற்குத் தமிழ் இலக்கியத்தைக் கொண்டு செல்வதற்கும் அப்பாடுபொருள் காரணமாக Universal Theme இருந்துள்ளது.

முத்தமிழ் என்னும் போது தமிழில் அதில் கலை, ஓவியம், இசை, கூத்து மற்றும் பிற நுண்கலைகள் அடங்கி விடுகின்றன. அவற்றை அறிந்து கொள்ள இலக்கியம் பயன்படுகிறது. சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரைக்கும் கடினமானவற்றிலிருந்து மெல்ல மெல்லத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. இக்காலத்திற்கேற்ப மொழியும் இலக்கியமும் இலகுவாக நடைபயில்கிறது.

தமிழ் இலக்கியம் தமிழர்க்கு மட்டுமின்றி உலகினர்க்கு என்றளவில் ஓர் உலகப் பொதுமையைக் Universality கொண்டதால்தான் அது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கருத்தினை மொழிந்தது.

இலக்கியம் எல்லோர்க்குமானது என்ற கருத்தியலை முன்வைத்து வைரவிழா ஆண்டில் நடைபோடுகிறது கலைஞன் பதிப்பகம். தமிழின் வளத்தை, இலக்கியச் செல்வத்தை, தமிழரின் பெருமையை உலகறியச் செய்வதற்குத் தமிழறிந்தோர்க்கும், ஆய்வறிஞர்களுக்கும் ஏற்றவாறு நூல்களைப் பதிப்பித்துள்ளது.

- பதிப்பாசிரியர்கள்

பதிப்பகத்தார் உரை

கலைஞன் பதிப்பகத்தின் வைரவிழா ஆண்டை முன்னிட்டு 'தொல்காப்பியம் முதல் பாரதி' வரையிலான இலக்கிய வரிசை நூல்களை உரைநடை வடிவில் சிறந்த பேராசிரியர்களைக் கொண்டு மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையுடன் இணைந்து வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

இந்திய ஆய்வியல் துறை அன்றைய தலைவர் முனைவர் கிருஷ்ணன் மணியம் தலைமையில் பேராசிரியர்கள் முனைவர் இராம குருநாதன், முனைவர் அபிதா சபாபதி, முனைவர் ஒப்பில்லா மதிவாணன், முனைவர் அரங்கபாரி ஆகியோர் கொண்ட குழுவின் நெறிகாட்டுதல் படி நூல்கள் எழுத விருப்பம் தெரிவித்த 600 பேராசிரியர்களிலிருந்து 60 பேராசிரியர்களை மட்டும் தெரிவு செய்வது என்பது கடினமான பணிதான்.

கல்வித் தகுதி, பணி மூப்புத் தகுதி, இதுவரை எழுதிய நூல்கள், பங்கேற்ற கருத்தரங்குகளில் படித்த ஆய்வுக் கட்டுரைகள் என பல்வேறு தகுதி நிலைக்கு ஏற்ப ஒரு வரைமுறையைத் தெரிவு செய்து, எழுதும் நெறிமுறையை ஏற்படுத்தி, நூல்கள் எழுதும் பணியை வழங்கினார்கள்.

எழுதும் பணியை ஏற்றுக் கொண்டு குறிப்பிட்ட காலத்துக்குள் எழுதி அனுப்பி வைத்த அனைத்துப் பேராசிரியர்களுக்கும், தேர்வுக் குழுப் பேராசிரியர்களுக்கும் எங்கள் சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அட்டைப் படம் வழங்கிய திரு. மருது அவர்களுக்கும் நன்றி.

கலைஞன் பதிப்பக நிறுவனர் உயர்திரு மாசிலாமணி அவர்களின் நெடுநாள் கனவு இது. இந்த வைர விழா நேரத்தில் இந்த நூல்களை இணைந்து வெளியிட உதவிய இந்திய ஆய்வியல் துறை பேராசிரியர்களுக்கும், மலாயாப் பல்கலைக்கழகத்திற்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்.

உண்மை விளக்கம்

நூல் அறிமுகம்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு ஆகும். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன அப்பதினான்கு ஆகும்.

இப்பதினான்கினுள் சைவ சித்தாந்த அடிப்படைகளைத் தெரிந்து கொள்வதற்கு உதவும் சைவ சித்தாந்த சாத்திரங்களின் அடிப்படை நூல் உண்மை விளக்கம் ஆகும்.

இந்நூலில் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைச் செய்திகள் விளக்கப்பெறுகின்றன. இதனை முதலாவதாகப் படித்து அறிந்து கொண்டபின் மற்ற சாத்திர நூல்களைப் படிப்பது என்பது தெளிவையும், தத்துவப் புரிதலையும் உண்டாக்கும்.

நூலின் ஆசிரியர்

உண்மை விளக்கம் என்ற இந்நூலின் ஆசிரியர் மனவாசகங் கடந்தார் ஆவார். இவர் சிவஞான போதம் என்ற சித்தாந்த தத்துவ நூலை அளித்த மெய்கண்டாரின் மாணவர்களுள் ஒருவர் ஆவார். இவரும் அருணந்தி சிவாசாரியாரும் ஒரே காலத்தில் மெய் கண்டாரிடம் படித்தவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் இருவரும் ஒரு சாலை மாணக்கர்களாக இருந்து சிந்தாந்தத் தத்துவங்களை மெய்கண்டாரிடம் கேட்டுத் தெளிந்துள்ளனர்.

இவர் திருவதிகை மனவாசகங் கடந்தார் என்று அழைக்கப் படுகிறார். திருவதிகை என்ற முன்னொட்டு இவரின் பிறந்த ஊரைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இதன் வழியாக இவர் திருவதிகை என்ற ஊரைச் சார்ந்தவர் என்ற குறிப்பு மட்டும் கிடைக்கப் பெறுகின்றது.

திருவதிகை என்பது தற்போது பண்ருட்டி என்று அழைக்கப் படும் ஊராகும். இங்குள்ள தலம் திருவதிகை வீரட்டானம் என்றும் அழைக்கப்பெறுகிறது.

சிவபெருமானின் அட்ட வீரட்ட தலங்களில் இது ஒன்றாகும். இக்கோயிலில் மனவாசகங்கடந்தாருக்குத் தனி சன்னதி உள்ளது. இவரின் காலம் மெய்கண்டாரின் காலத்துடன் இயைந்து செல்வதால் இவர் பதிமூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பது தெரிய வருகின்றது.

நூல் அமைப்பு முறை

உண்மை விளக்கம் என்ற இந்நூல், காப்புச் செய்யுளை உள்ளடக்கி ஐம்பத்தி நான்கு வெண்பாக்களை உடையதாகும்.

இந்நூலின் செய்யுட்கள் யாவும் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன.

மாணவர் கேள்விகளைக் கேட்க, அதற்குத் தகுந்த விடைகளை ஆசிரியர் விளக்கமுடன் உரைப்பதாக இந்நூல் செய்யப்பெற்றுள்ளது. மாணவராக மனவாசகங்கடந்தார் அமைகிறார்.

குருவாக திருவெண்ணெய்நல்லூரில் தோன்றிய ஞானாசிரிய ரான மெய்கண்டார் அமைகின்றார். இவரே குரு. இவரே இறைவடிவம் என்பதை இந்நூல் உறுதி பட ஏற்கின்றது.

பாசம், பசு, பதி என்ற முறையில் இந்நூல் தத்துவச் செய்தி களை வரிசையாக வழங்குகின்றது. பதி, பசு, பாசம் என்ற முறை யில் தத்துவங்களை அமைத்துக் கொள்வது என்பது மேலிருந்து

தத்துவங்களை அமைத்துக்கொள்ளும் முறையாகும். பாசம், பசு, பதி என்ற முறை கீழிருந்து தத்துவங்களை விளங்கிக் கொள்ளும் முறையாகும்.

பதி, பசு, பாசம் என்று மெய்கண்டார், சிவஞானசித்தியார் ஆகியோர் தத்துவ முறைமையை அமைத்துக்கொள்ள, மன வாசகங்கடந்தார் கீழிருந்து மேலான முறையை அமைத்துக் கொள்கிறார்.

அதாவது பாசம், பசு, பதி என்று அவர் அமைத்துக் கொண்டு நூல் செய்கின்றார். தெரிந்ததில் இருந்து தெரியாததற்கு அழைத்துச் செல்லுதல் என்ற நிலையில், பாசத்திலிருந்து பதிக்கு இவர் அழைத்துச் செல்கிறார். இதன் காரணமாகவே இந்நூல் சாத்திரச் செய்திகளை எளிமை பட உரைப்பது என்பது தெரிய வருகின்றது.

நூற்பொருள்

இந்நூலில்,

காப்புப்பாடல் - விநாயகர் வணக்கம்

முதற்பாடல் - ஆசிரியருக்கு மாணவர் விடையளிக்க விண்ணப்பம் செய்தல்.

2ஆம் பாடல்- இப்பாடலே இந்நூலின் வடிவமைப்பினைச் சொல்லும் பாடல் ஆகும்.

1. முப்பத்தாறு தத்துவங்கள் யாவை?
2. ஆணவம் என்பது யாது?
3. கன்மத்தின் இயல்பு யாது?
4. நான் யார்?
5. நீ (குருவின்) யார்? உனது தன்மைகள் யாவை?
6. இறைவன் ஆடும் திருக்கூத்தின் இயல்பு யாது?

7. திருவைந்தெழுத்தின் சிறப்பு யாது?

8. முத்தியின் இயல்பு யாது?

என்ற பல கேள்விகளை இப்பாடல் ஞானாசிரியரிடம் வினவுகின்றது.

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் விளக்கமான பதிலை ஞானாசிரியர் சொல்லுவது என்பதுதான் இந்நூலின் அடுத்தடுத்த பாடல்கள் ஆகும்.

3ஆம் பாடல்- ஆசிரியர் மாணவரின் அறியாமையை நீக்கும் வண்ணம் பதில் அளிக்கத் தொடங்குகிறார்.

4ஆம் பாடல்- நான்காம் பாடல் முதல் 21 ஆம் பாடல் வரை ஆறாறு தத்துவங்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெறுகின்றன.

22ஆம் பாடல்- ஆசிரியர் ஆணவத்தைப் பற்றி விளக்குகிறார்.

23 ஆம்பாடல்- நான் யார் என்ற கேள்வியை மாணவர் எழுப்புகிறார்.

24 ஆம் பாடல்- ஆன்மாவின் இலக்கணத்தைச் சொல்லி நான் யார் என்பதை ஞானாசிரியர் இந்தப் பாடலில் உணர்த்துகிறார்.

25,26 ஆகிய பாடல்கள் ஆறாறு தத்துவங்களுக்கும், ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பினை எடுத்துரைப்பதாக உள்ளது.

27 முதல் 29 ஆம் பாடல்வரை ஞானாசிரியர் இயல்பினை மாணவர் சொல்ல வேண்டுதல்.

30 ஆம் பாடல் இறைவன் ஆடும் திருக்கூத்தின் இயல்பினை மாணவர் சொல்ல வேண்டுதல்.

31 ஆம் பாடல் முதல் 38 ஆம் பாடல் வரை திருநடனக் கூத்தின் இயல்புகளை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

39ஆம் பாடல் திருவைந்தெழுத்தின் தன்மையை எடுத்துரைக்க ஆசிரியரிடம் மாணவர் வினவுகின்றார்.

40ஆம் பாடல் முதல் 44 ஆம் பாடல் திருவைந்தெழுத்தின் இயல்புகளை ஞானாசிரியர் விளக்குகின்றார்

45 ஆம் பாடல் முதல் 53 ஆம் பாடல்வரை முக்தி நிலை பற்றி செய்திகள் எடுத்துரைக்கப்பெறுகின்றன.

இவ்வாறு 53 பாடல்களில் மாணவர் கேட்ட கேள்விகளுக்கு விரிவான விளக்கமான விடைகளை வழங்கி சித்தாந்தத் தத்துவத்தை விளக்கி நிற்கிறது இந்நூல்.

○

நூல் பற்றிய ஆய்வுரை

தத்துவம் என்பது வடமொழிச்சொல்லாகும். இதற்கு உண்மை என்று தமிழில் பொருள் கொள்ளலாம். முப்பொருள் உண்மையை இந்நூல் விளக்குவதால் உண்மை விளக்கம் என்ற பெயர் இதற்குப் பொருத்தமுடையதாக அமைகின்றது.

உண்மை விளக்கம் என்ற இந்நூல் 'பொய் காட்டி' என்று தொடங்குகின்றது. 'வாழ்ந்தேன்' என்று முடிகின்றது. இதன் காரணமாக இந்நூலைப் பயில்வோரைப் பொய்யான வாழ்விலிருந்து விலக்கி உண்மை வாழ்வைத் தலைப்படுமாறு செய்கின்றது என்கிறார் ஆ. ஆனந்தராசன். (உண்மை விளக்கம் உரை ப. 7)

சைவ சித்தாந்தம், அழியாத உண்மைப் பொருள்களாக மூன்றினைச் சுட்டும். அவை மேற்பொருளான இறை. இடைப்பொருளான உயிர். கீழ்ப்பொருளான மலங்கள். இம்மூன்று உண்மைகளையும் தெளிவுபட, குழப்பமின்றி இந்நூல் எடுத்துரைக்கின்றது.

இந்நூல் தவிர மற்ற சாத்திர நூல்களும் முப்பொருள் இயல்பினை விளக்கிவரைகின்றன என்றாலும், இந்நூல் முப்பத்தாறு தத்துவங்களைச் சொல்லி அவற்றின் அடிப்படையில் முப்பொருளைத் தெளிவுபட விளக்குகின்றது என்பது இந்நூலுக்கு உள்ளத் தனிச்சிறப்பு ஆகும்.

மேலும் சாத்திர நூல்கள் பலவற்றிலும் சுட்டப்பெறாத நடராசத் திருக்கூத்தின் வடிவழகை இந்நூல் காட்டுகின்றது. அதைவிட இந்நூல் சிவ நடனத்தினைத் தான் கண்ட வண்ணம் மற்றவர்க்குக் காட்டுகின்றது. இது இந்நூலின் மற்றொரு தனிச்சிறப்பாகும்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள உவமைகள் தனித்த வளம் வாய்ந்தவை. அவை சித்தாந்தப் பொருள்களை உணர்ந்து கொள்ள உதவுகின்றன.

குருவையே சிவமாகக் காணும் நிலையில் குருவிடம் தன் சந்தேகங்களை, தடைகளைத் தீர்த்துக்கொள்ளும் புதிய உத்தி

முறையில் இந்நூல் படைக்கப்பெற்றுள்ளது. இதன் வழியாக சித்தாந்த சாத்திரங்கள் அக்காலத்தில் ஞானாசிரியரால் மாண வர்க்கு வழங்கப்பெற்ற நடைமுறைகள் தெரிந்து கொள்ள ஏதுவாகின்றன.

ஞானாசிரியரைப் பற்றிய பல குறிப்புகளை இந்நூல் எடுத்தி யம்புகின்றது. இவரின் ஞானாசிரியர் மெய்கண்ட தேவநாயனார் ஆவார். இவர் சந்தானாசாரியார்களில் தலைமை யானவர் ஆவார். சித்தாந்த ஆசிரியர்களை சந்தானசாரியர்கள் என்று அழைப்பது மரபாகும். மெய்கண்டார், அருணந்திசிவம், மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகியோர் சந்தான சாரியார்கள் எனப்படுவர்.

மெய்கண்டார் பெண்ணாகடம் என்ற ஊரில் வாழ்ந்த அச்சுத களப்பாளர் என்பாரின் மகனாகப் பிறந்தார். பல நாட்கள் பிள்ளை இல்லாமல் இருந்த நிலையை மாற்றித் திருவருளால் பிறந்த குழந்தை மெய்கண்டார் ஆவார். இளவயதில் திரு வெண்ணெய் நல்லூருக்குத் தன் தாய் மாமன் வீட்டுக்கு இக்குழந்தை சென்றது.

தெருவில் ஒரு நாள் விளையாடிக்கொண்டிருக்கும்போது ஆசாரியர்களுள் ஒருவரான பரஞ்சோதி முனிவர் வானில் சென்று கொண்டிருக்கும் போது இக்குழந்தையைக் கண்டார்.

இக் குழந்தையின் மெய்யுணர் திறம் அறிந்து, மெய்கண்ட சிவம் என்ற பெயரை அருளி, இக்குழந்தைக்கு சிவதீட்சை செய்து, சிவஞான போதத்தை வழங்கி அருளினார்.

குருவருளால் பெற்ற சிவஞான போதத்தை நூலாக்கித் தம்மை வந்தடைந்தோருக்கு சிவவழி காட்டிக்கொண்டு வந்தார் மெய்கண்டசிவம். இதனை அறிந்த இவரின் குலகுரு அருணந்தி சிவம் இவரது மெய்யாற்றலைப் பரிசோதிக்க வந்து தானே இவரின் மாணவர் ஆனார்.

அருணந்தி சிவம், திருவதிகை மனவாசகம் கடந்தார், சிற்றம்பல நாடிகள் போன்ற நாற்பத்தொன்பது பேரின் பக்குவ நிலையறிந்து அவர்களுக்குச் சிவதீட்சை தந்து முப்பொருள்

உண்மையை இவ்வாசிரியர் உணர்த்தினார். இத்தகைய பெருமை பெற்றவர் மெய்கண்ட சிவம். இவரே குருவாக அமைந்து இந் நூலுக்கும், மனவாசகங்கடந்தாருக்கும் மெய்காட்டி அருளினார். இத்தகைய ஞானாசிரியரைப் பற்றி பல குறிப்புகளை இந்நூலுள் பொதிந்து தந்துள்ளார் மனவாசகங்கடந்தார்.

மெய் காட்டும் மெய்கண்டாய் என்று ஞானசிரியரின் திருப் பெயரை இரண்டாம் பாடலில் மனவாசகங்கடந்தார் சுட்டு கின்றார். ஞானாசிரியரின் இயல்புகளாக பின்வரும் தன்மைகளை இந்நூலாசிரியர் எடுத்துரைக்கின்றார்.

1. *பொய்காட்டா மெய்யா?*
2. *திருவெண்ணெய் நல்லூர் வித்தகா!*
3. *மனம், வாக்கு ஆகியவற்றிற்கு எட்டாத நிலையினை உடைய சிவபெருமானின் வடிவமே!*
4. *உலகப் பொருள்களால் தாக்கம் பெறாமல் நிற்கும் தனிமுதல்வனே!*
5. *சுவேதனப் பெருமாள் என்று பிள்ளை நாமம் கொண்டவரே!*
6. *வெண்ணெய்நல்லூர் என்ற ஊர் சார்ந்தவரே!*
7. *மெய்யடியார்கள் எப்பொழுதும் சூழப்பெற்றிருப்பவரே!*
8. *அருட்கடலே!*

என்று ஞானாசிரியரின் இயல்புகளை மனவாசகங்கடந்தார் எடுத்துரைக்கின்றார்.

இவற்றின் வழியாக குருவின்மீது இவர் கொண்டிருந்த பக்தி தெரியவருகிறது.

இந்நூலில் முக்திக்கு வழியாக மூவழிகள் காட்டப் பெறுகின்றன. குரு வழிபாடு, லிங்க வழிபாடு, சங்கம வழிபாடு என்பன அவை மூன்றுமாகும். இம்மூன்றில் குரு வழிபாட்டால் முக்தி பெறுவது என்ற நடைமுறையில் இந்நூலை அமைத்து மனவாசகங்கடந்தார் முக்தி பெற்றுள்ளார்.

வற்றாப் பருவக்கடலில் வீழ்ந்தே அலையாமல், மேதினியில் வாழ்ந்தேன் என்று நிறைவுப்பாடலில் மனவாசகங்கடந்தார் குரு வழிபாட்டால் நிறைநிலை பெற்றதை எடுத்துரைக்கின்றார்.

இந்நூலில் அறிவுப் பொருளாக, குருவான மெய்கண்டார் விளங்குகின்றார். அறிவினை அறிந்து கொள்ளும் ஆன்மா நிலையில் மனவாசகங்கடந்தார் செயல்படுகிறார்.

ஆன்மா அறிவிக்க அறிவது என்பதால் மெய்கண்ட சிவனார் சிவதத்துவங்களை அறிவிக்க, அதன் காரணமாக அறிந்து கொள்ளும் தன்மை பெற்றவராக மனவாசகங்கடந்தார் விளங்குகின்றார்.

இந்நூலின் இத்தன்மைதான், கூற விரும்பும் பொருளுக்கு இயைபுடையதாய் நூலும் அமைகின்றது. நூல் இயற்றியோரும் அமைகின்றார் என்பதைக் காட்டுவதாக உள்ளது.

திருவைந்தெழுத்தின் சிறப்பினை இந்நூல் எடுத்துரைக்கின்றது. நமசிவாய மந்திரத்திற்கும் சிவாயநம மந்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டி, முக்தி நெறிக்கு இந்நூல் அழைத்துச்செல்கின்றது.

மேலும், திருவைந்தெழுத்தின் அழியாத் தன்மையையும், அவ்வைந்தெழுத்தில் இறை நடனம் பொருந்தியிருப்பதையும் தெளிவுபட இந்நூல் காட்டுகின்றது.

○

நூல் தரும் செய்திகள்

உண்மை விளக்கம் என்ற இந்த நூல் சித்தாந்தத் தத்துவங்களை விளக்கும் நூலாகும். இந்நூலில் உள்ள அடிப்படைச் செய்திகளை அறிந்தால் மட்டுமே சித்தாந்த ஞானம் தெளிவாகக் கைவரப்பெறும். எனவே சிந்தாந்தம் கற்பவர்களுக்கு இந்நூல் அடிப்படைக் கருவிநூலாகும்.

காப்புச் செய்யுள்

சிவ ஆகம நூல்களில் உணர்த்தப்படும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் இயல்புகளைக் குற்றம் குறையில்லாமல் விளக்குவது உண்மை விளக்கம் என்ற இந்த நூலாகும். இந் நூலை நலமுடன் செய்ய வேண்டி விநாயகப்பெருமானை வணங்குவோம்.

விநாயகப் பெருமான் சிவந்த ஒளி மிக்க நிறத்தை உடையவர். அவர் மதம் பொழியும் ஆனை முகத்தைக் கொண்டவர். அவர் பருத்த திருவயிற்றினை உடையவர். ஐந்துத் திருக் கரங்களை உடையவர். இவரை உள்ளத்தில் கொண்டு வழிபடுவோம். இப்பாடல் விநாயகரை வணங்கி இந்நூல் இனிதே நிறைவு பெற வேண்டுதல் செய்கின்றது.

பாடல். 1

இறைவனை அடையும் பக்குவம் பெற்ற ஆன்மாவிற்கு, பாசம் என்ற உலகக் கட்டுகளையும், பசு என்ற ஆன்மாவின் உண்மை இயல்புகளையும் எடுத்துரைத்து, அவற்றைப் பொய் எனக் காட்டி, அவற்றை அகற்றி, போத ஆனந்தப் பொருளாக விளங்கும் பதி ஞானமே- இறை ஒன்றே உண்மை என்று அறிவிக்கும் மெய்கண்ட நாதர் என்ற ஞான குருவே!

வினை தராத உடம்பை உடையவரே! திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியுள்ள வித்தகரே! ஐயனே! திருவருளோடு

ஒன்றும் கருத்துடைய அடியவன் கேட்கும் கேள்விகளை கேட்டு அதற்கு உரிய விடைகளைக் கூறித் தாங்கள் அருள் செய்ய வேண்டும் என்ற விண்ணப்பத்துடன் முதல் பாடல் தொடங்குகின்றது.

பாடல். 2

குரு முதல்வரே! எனக்கு எழுந்துள்ள ஐயங்களையும் கேள்விகளையும் உங்கள் முன் வைக்கின்றேன். அவற்றிற்கு உரிய பதிலைத் தந்தருள்க.

1. சைவ சமயத்தில் அமைத்துக் கொள்ளப்பெற்றுள்ள முப்பத்தாறு தத்துவங்கள் யாவை?
2. ஆணவம் என்பது யாது?
3. நீங்காமல் தொடர்ந்து வருகின்ற கன்மத்தின் இயல்பு யாது?
4. ஆணவம், கன்மம் ஆகிய வினைகளில் ஆட்பட்டு உழலுகின்ற நான் யார்?
5. குரு என்பவர் யார்? அவரது தன்மைகள் யாவை?
6. இறைவன் ஆடும் திருக்கூத்தின் இயல்பு யாது?
7. திருவைந்தெழுத்தின் சிறப்பு யாது?
8. முத்தியின் இயல்பு யாது?

ஆகிய எட்டுக் கேள்விகளை இப்பாடல் ஆசிரியரிடம் வினவுகின்றது.

முதல் மூன்று வினாக்கள் பாசம் பற்றிய வினாக்கள் ஆகும். பசுவைப் பற்றி நிற்கின்ற மாயையில் இருந்து தோன்றிய பொருள்கள் முப்பத்தாறு தத்துவங்கள் ஆகும். இத்தத்துவங்களைப் பற்றிய வினா முதல் வினா ஆகும். எனவே இவ்வினா மாயை பற்றியது என முடியலாம்.

அடுத்த வினா ஆணவம் பற்றியும் அதற்கு அடுத்த வினா கன்மம் பற்றியும் அமைவதால் பாச இயல்புகள் குறித்து இம் மூன்று வினாக்கள் அமைந்துள்ளன என்பது தெரிய வருகின்றது.

நான்காம் வினாவாகிய நான் என்பது யார் என்ற கேள்வி, பசுவின் இயல்புகளை எடுத்துரைப்பதாகும்.

ஐந்தாம் வினாவாகிய குரு யார் என்பது சிவமே குருவாக வருவார் என்பதால் பதி பற்றிய கேள்வியாக அதனைக் கொள்ள வேண்டும். இதற்கு அடுத்து பதியின் இயல்பான திருக்கூத்து விளக்கப்படுவதால் அதுவும் பதியைப் பற்றிய விளக்கமாக அமைந்துவிடுகிறது.

ஏழாம் வினா, திருவைந்தெழுத்து என்ற புறச்சாதனத்தைப் பற்றியதாகும். சாதனத்திற்குப் பின் பயன் கூறவேண்டும் என்ப தால், முக்தி பற்றிய செய்திகள் எடுத்துரைப்பதற்கான வாயிலாக இவ்வினா அமைந்துவிடுகின்றது.

இவ்வாறு நல்ல கட்டமைப்புடன் படிப்படியாக இந்நூல் சிந்தாந்த விளக்கம் பெற வினாக்களை முன் வைத்து, விடை களைப் பெற முயலும் நூலாக எழுதப்பெற்றுள்ளது.

பாடல். 3

சிவானந்த நிலையை அடைய வல்ல யோகநெறியில் நிற்கும் மாணவனே! இறைவன் உயிர்கள் மீது தான் கொண்ட கருணையினால் முற்காலத்தில் ஆக்கி அருளிய தெளிவும் சிறப்பும் மிக்க சிவ ஆகமங்கள் சொல்லிய முறையிலே உனக்கு உள்ளவாறு யாம் உரிய பதில்களை உனக்குச் சொல்ல விழைகின்றேன். நீ மனம் பொருந்திக் கேட்பாயாக

பாடல். 4

சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மையை அடிப்படை யாகக் கொண்டது. பாசம், பசு, பதி என்பன அம்முப்பொருள்கள்

ஆகும். இவற்றுள் பாசம் என்பது இறைவனை ஆன்மா அடைய விடாமல் செய்யும் தடை ஆகும். பசு என்பது ஆன்மாவாகும். பதி என்பது இறைவன் ஆவான்.

பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற முத்தடைகளை உடையது. முதலாவதாக இவ்வாசிரியர் மாயை என்பதை எடுத்துக்கொண்டு அத்தடையின் இயல்புகளை எடுத்துரைக்கிறார். இந்த மாயை விலக முப்பத்தாறு தத்துவங்களை கடக்க வேண்டும்.

முப்பத்தாறு தத்துவங்களும் மாயையின் சார்புடையவை. மாயை என்பது கண்ணுக்குப் புலப்படாத நுண்மை உடைய அருவப்பொருள் ஆகும்.

இந்த மாயை சுத்த மாயை, அசுத்த மாயை என இரு வகைப்படும். இதனுடன் பிரகிருதி மாயை என்ற ஒன்றும் இணைகின்றது. ஆக, மாயை மூன்று வகைப் படுகின்றது. பிரகிருதி மாயை என்பது தனித்த மாயை அல்ல. அது அசுத்த மாயையின் ஒரு பகுதியாகும். இம்மாயைகளில் முப்பத்தாறு தத்துவங்கள் அமைந்து நிற்கின்றன.

சுத்த மாயா தத்துவங்கள் (சிவ தத்துவம்)	-	5
அசுத்த மாயா தத்துவங்கள் (வித்தியா தத்துவம்)	-	7
பிரகிருதி மாயா தத்துவங்கள்(ஆன்ம தத்துவங்கள்)	-	24
ஆக மொத்தம் தத்துவங்கள்	-	36

இவற்றில் பிரகிருதி மாயா தத்துவங்கள் 24 ஆகும். இவற்றை இந்நூலாசிரியர் முதலாவதாக விளக்குகின்றார்.

பூதங்கள் (5), ஞானேந்திரியங்கள் (5), கன்மேந்திரியங்கள் (5), அந்தக்கரணங்கள் (4) ஆக மொத்தம் 24 தத்துவங்கள் பிரிகிருதி மாயா தத்துவங்கள் எனப்படும். இவை நான்காம் பாடலில் இருந்து விளக்கம் பெற வைக்கப்படுகின்றன.

பூதங்கள் (5)

பூதங்கள் ஐந்தாகும். அவை மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியனவாகும். மண் என்பதன் வடிவம் நாற்கோணம் ஆகும்.

நீர் என்பதன் வடிவம் சந்திரனைப் போன்ற அரைவட்ட வடிவினதாய் இருக்கும். நெருப்பு முக்கோண வடிவில் அமையும்.

எப்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் காற்றானது அறுகோண வடிவில் தோன்றும்.

வானம் என்பதன் வடிவம் வட்டமாகும். இவ்வைந்து பூதங்களின் சேர்க்கையினால் உடம்பு உருவாக்கம் கொள்கிறது.

பாடல். 5

இவ்வைந்து பூதங்களை மேலும் விளக்குகின்றார் ஆசிரியர். மண்ணின் நிறம் பொன்னின் நிறமாகும். நீர் வெண்மை நிறம் உடையது. ஓங்கி எழுந்த நெருப்பானது சிவப்பு நிறமுடையது. வலிமை பொருந்திய காற்று கருநிறம் உடையது. பரந்து விரிந்த வானம் என்பது புகை நிறம் உடையது.

இவற்றுக்கு உரிய எழுத்துகளும் ஆசிரியரால் உணர்த்தப் படுகின்றன.

மண் என்பதற்குரிய எழுத்து ல, நீருக்கு உரிய எழுத்து- வ, நெருப்பிற்கு உரிய எழுத்து- ர, காற்றுக்கு உரிய எழுத்து- ய, வானத்திற்கு உரிய எழுத்து- ஹ என்பதாகும்.

இவ்வாறு ஐம்பூதங்களுக்கு உரிய எழுத்துகளும், நிறங்களும் இப்பாடலில் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

பாடல்.6

ஆறாம் பாடலில் ஐம்பூதங்களுக்கு உரிய அடையாளங்கள் குறிக்கப்பெறுகின்றன. பூமிக்கு உரிய அடையாளம் வச்சிரம் ஆகும். நீருக்கு உரிய அடையாளம் தாமரைப்பூவாகும். தீ என்பதற்கு உரிய அடையாளம் சுவத்திகம் ஆகும்.

காற்றுக்கு உரிய அடையாளம் அறுபுள்ளி ஆகும். வானம் என்பதற்கு உரிய அடையாளம் அமுத விந்து ஆகும்.

பாடல். 7, 8

இப்பாடலில் ஐம்பூதங்களுக்கான தெய்வங்களும், அவர் களின் தொழில்களும் விரித்துரைக்கப் பெறுகின்றன.

பூமிக்கு பிரம்மன், நீருக்குத் திருமால், தீக்கு உருத்திரர், காற்றிற்கு மகேசுவரர், ஆகாயத்திற்கு சதாசிவர் ஆகியோர் தெய்வங்கள் ஆவர். இவர்கள் ஐவரும் ஐந்தொழில்களைச் செய்கின்றனர்.

பிரம்மா - படைத்தல் தொழிலையும், திருமால் காத்தல் தொழிலையும், உருத்திரர் அழித்தல் தொழிலையும், மகேசுவரர் மறைத்தல் தொழிலையும், சதாசிவர் அருளல் தொழிலையும் செய்வதாக உண்மை விளக்கம் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

பாடல். 9

ஐம்பூதங்களின் குணமும் செயல்களும் எட்டாம் பாடலில் குறிக்கப்படுகின்றது. மண் திண்மைக் குணம் உடையது. அது பொருள்களைத் தாங்கும் சக்தி உடையது. நீர் குளிர்ச்சியான இயல்புடையது. அது பொருள்களை மென்மைப் படுத்தும். தீ வெம்மைக் குணம் உடையது. அது பொருள்கள் அனைத்தையும் நீறாக்கி ஒன்று படுத்தும். காற்று எங்கும் பரவிப் பொருள்களைத் திரட்டும். ஆகாயம் வெளியாதல் ஆகிய குணம் உடையது. அது எப்பொருளிலும் ஊடுருவி நிற்கும் இயல்பினது.

பாடல் 10

ஐம்பூதங்களை அடுத்து ஐம்புலன்கள் பற்றி இப்பாடல் எடுத்துரைக்கின்றது. ஓசை, ஸ்பரிசம், உருவம், சுவை, மணம் ஆகிய ஐந்தும் ஐம்புலன்கள் ஆகும். இவற்றைத் தன்மாத்திரைகள் என்றும் குறிப்பிடலாம். இவை ஐம்பூதங்களின் சூக்கும் நிலை என்று கொள்ளவேண்டும்.

பாடல்.11

இப்பாடல் ஞானேந்திரியங்கள் பற்றி அறிவிக்கின்றது. ஓசை, ஸ்பரிசம், உருவம், சுவை, மணம் ஆகிய ஐம்புலன்கள் தொழில் படும் இடங்கள் ஞானேந்திரியங்கள் ஆகும்.

செவி, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஆகும்.

செவியின் வழியாக ஓசையை அறிய இயலும். தோல் வழியாக தொடு உணர்ச்சியைப் பெற இயலும். கண்ணின் வழி யாக உருவத்தை அறிய இயலும். நாக்கின் வழியாக சுவையை உணர இயலும். மூக்கின் வழியாக மணத்தை அறிய இயலும்.

இவ்வைந்து புலன்கள் வழியாக அறியப்படும் அறிவு புலனறிவு ஆகின்றது. இவ்வைந்து கருவிகளும் ஞானேந்திரியங் கள் ஆகின்றது. இதனை அறிகருவிகள் என்று தமிழில் அழைக்கலாம்.

பாடல் 12.13

ஞானேந்திரியங்கள் ஐம்பூதங்களுடன் தொடர்பில் இருப்பதை இவ்விரு பாடல்கள் உணர்த்துகின்றன.

ஐம்பூதங்கள்	ஐம்புலன்கள்	ஐம்பொறிகள்
பூமி	மணம்	மூக்கு
நீர்	சுவை	நாக்கு
தீ	உருவம்	கண்
காற்று	ஸ்பரிசம்	தோல்
வானம்	ஓசை	செவி

பூமியை இடமாகக் கொண்டு மூக்கு என்னும் உறுப்பு ஒரு பொருளின் மணத்தை அறிகிறது.

நீரை இடமாகக் கொண்டு நாக்கு என்னும் உறுப்பு ஒரு பொருளின் சுவையை அறிகிறது.

தீயை இடமாகக் கொண்டு கண் என்னும் உறுப்பு ஒரு பொருளின் உருவத்தை அறிகிறது.

காற்றினை இடமாகக் கொண்டு ஸ்பரிசம் (ஊறு) என்ற உணர்வைத் தோல் உணர்கிறது.

வானத்தை இடமாகக்கொண்டு செவி என்னும் உறுப்பு ஒரு பொருள் தரும் ஓசையை உணர்கிறது.

இத்தகைய பொறிகளை அடக்கி ஞானிகள் பேரின்ப வீட்டினை அடைகிறார்கள்

பாடல் 14

கன்மேந்திரியங்கள் பற்றிய செய்திகளை இப்பாடல் உணர்த்துகின்றது.

வாய், கால், கை, எருவாய், கருவாய் ஆகியன தொழில் பொறிகள் ஆகும்.

இவை ஐந்து தொழில்களைச் செய்கின்றது. முறையே பேசுதல், போக்குவரவு புரிதல், ஏற்றலும் .இடுதலும், மலக்கழிவு களை வெளியேற்றுதல், சுக்கிலம் முதலானவற்றை வெளிப் படுத்தல் ஆகிய ஐந்து தொழில்களும் கன்மேந்திரியங்களால் செய்யப்படுகின்றன. இவற்றைத் தொழிற்கருவிகள் என்றும் அழைக்கலாம்.

பாடல் 15

கன்மேந்திரியங்களும் ஐம்பூதங்களின் தொடர்பில் உள்ள வையே ஆகும். அதனை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

ஆகாயம் என்ற பூதத்தை இடமாகக்கொண்டு, வாயானது பேசுதல் என்ற தொழிலைச் செய்யும். காற்றை இடமாகக் கொண்டு கால்களானது போக்குவரவு செய்யும். நெருப்பினை இடமாகக்கொண்டு கைகள் கொடுப்பதும் ஏற்பதும் ஆகிய செயல்களைச் செய்யும். நீரை இடமாகக் கொண்டு எருவாய்

மலசலங்களை வெளியேற்றும். பூமியை இடமாகக்கொண்டு கருவாய் சுக்கிலம் முதலானவற்றை வெளிப்படுத்தி இன்பம் கொள்ளும்.

இவ்வாறு ஐம்பூதங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் ஆகியன பற்றிய விளக்கங்கள் இந்நூலின் வழியாகப் பெறப்படுகின்றன.

பாடல். 16

அந்தக்கரணங்கள் நான்கினை இந்தப் பாடல் எடுத்துரைக்கின்றது.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பன நான்கும் அந்தக் கரணங்கள் ஆகும். இவற்றிற்கு உட்கருவிகள் என்ற பெயரும் உண்டு. மனம் ஒரு பொருளைப் பற்றுகிறது. புத்தி அந்தப் பொருளை இன்னது என்று நிச்சயிக்க முற்படுகிறது. அகங்காரம் அப்பொருளை அடைந்தே தீருவேன் என்று செயல்படும். சித்தம் அந்தப்பொருள் பற்றி மீள மீளச் சிந்திக்கும்.

பாடல்.17

இதுவரை காட்டப்பெற்ற இருபத்துநான்கு தத்துவங்களும் ஆன்ம தத்துவங்கள் ஆகும். இனி வித்தியா தத்துவங்கள் பற்றிய செய்திகளை ஆசிரியர் உரைக்க முற்படுகிறார்.

பாடல். 18,19

வித்தியாதத்துவங்கள் என்பன காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை ஆகியனவாகும்.

காலம் - என்பது மூவகைப்பட்டது. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என அவை முப்பிரிப்பாக நிற்கும்.

நியதி- நியதித் தத்துவம் அவரவர் வினைகளை அவரவரே அனுபவிக்கவும், எக்காலம் வரை அதனை அனுபவிக்க வேண்டும் என்பதையும் கணக்கிட்டு நடத்துகிறது.

கலை - கலை என்ற தத்துவம், ஆணவ மலத்தில் ஆன்மா அழுத்திக் கிடக்கும்போது, எவ்வித இயக்கமும் இல்லாமல் கிடக்கும். அதற்குக் கலை என்ற உந்து சக்தி தரப்பட்டு இயங்க வைக்க இந்தக் கலை என்ற அந்தக்கரணம் பயன்படுகின்றது.

வித்தை - ஆணவ மலத்தில் அழுந்திக் கிடக்கும் ஆன்மாவின் ஞானசக்தியை முதற்கண் எழுப்புவது வித்தை ஆகும்.

அராகம் - ஆணவ மலத்தில் மறைப்புண்டு கிடந்த ஆன்மா வின் இச்சா சக்தியைத் தூண்டுவது அராகம் ஆகும்.

புருடன் ஆன்மாவானது பிரகிருதி மாய கருவிகளைப் பற்றிப் போகம் அனுபவிப்பதற்கு ஆயத்தமாக நிற்கும் நிலையே புருடன் என்ற தத்துவம் ஆகும்.

மாயை அசுத்த மாயையின் கலக்குண்ட பாகமே மாயை எனப்படும்.

இவ்வாறு வித்தியா தத்துவங்கள் இவையென எடுத்து ரைக்கப் பெறுகின்றன.

பாடல்.20

இப்பாடலில் சிவ தத்துவங்கள் ஐந்தும் சுட்டப் படுகின்றன. சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆகிய ஐந்தும் சிவதத்துவங்கள் எனப்படும்.

பாடல். 21.

சுத்த வித்தை நிலையில் ஞானம் மிகுந்து கிரியை குறைந்து நிற்கும்.

ஈசுவரம் ஞானம் குறைந்து கிரியை மிகுந்து நிற்கும்.

சாதாக்கியம் ஞானமும் கிரியையும் ஒத்து இருக்கும்.

சத்தி கிரியையாக நிற்கும்.

சிவம் ஞானமாய் இருக்கும்.

இவ்வைந்து நிலைகளும் சிவ தத்துவ நிலைகள் ஆகும்.

இவ்வாறு முப்பத்தாறு தத்துவங்கள் இந்நூலில் விளக்கம் பெறுகின்றன. இவற்றைப் பின்வருமாறு அறிந்து தெளிவு படுத்திக் கொள்ளலாம்.

சிவ தத்துவங்கள் (5)

1. சிவம் 2. சக்தி 3. சாதாக்கியம் 4. ஈசுவரம் 5. சுத்தவித்தை

அசுத்த மாயா தத்துவங்கள் (7)

1. காலம் 2. நியதி 3.கலை 4. வித்தை 5. அராகம் 6. புருடன் 7. மாயை.

பிரகிருதி மாயா தத்துவங்கள் (24)

ஐம்பூதங்கள்

1. மண் 2. நீர் 3. தீ 4. காற்று 5. வான்

தன்மாத்திரைகள்

6. நாற்றம் 7. சுவை 8. ஒளி 9. ஊறு 10. ஒலி

ஞானேந்திரியங்கள்

11.செவி 12. தோல் 13. கண் 14. நாக்கு 15. மூக்கு

கன்மேந்திரியங்கள்

16. வாய் 17. கால் 18. கை 19. எருவாய் 20. கருவாய்

அந்தக்கரணங்கள்

21. மனம் 22 புத்தி 23. சித்தம் 24 அகங்காரம்

இவ்வாறு முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிய விளக்கங்களை முழுமையாகவும் எளிமையாகவும் இந்நூல் ஒன்றே விளக்கு கின்றது.

மேற்காட்டிய விளக்கம், ஒன்றில் தொடங்கி இருபத்து நான்கில் முடிகின்றது. இருபத்துநான்கில் தொடங்கி ஒன்றில் முடியும்படி அமைத்துக்கொண்டால் இத்தத்துவங்கள் இன்னும் விளக்கம் பெறும்.

பிரிகிருதி மாயை என்பதில் இருந்து உயிருக்கு உதவும் அகக் கருவிகள் முதலில் தோன்றும். அகக்கருவிகள் என்பன சித்தம், புத்தி, அகங்காரம், மனம் என்பனவாகும்.

அகக்கருவிகளான இவற்றைத் தொடர்ந்து ஞானேந்திரியங் கள் ஐந்தும் தோன்றும். செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என்பன ஞானேந்திரியங்கள் ஆகும்.

இவற்றைத் தொடர்ந்து கன்மேந்திரியங்கள் தோன்றும். அவை வாய், கால், கை. எருவாய், கருவாய் ஆகும். இவை பேசுதல், நடத்தல், இடுதல், ஏற்றல், கழித்தல், இன்புறல் ஆகிய தொழில்களை ஆற்றுகின்றன.

இதனைத் தொடர்ந்து தன் மாத்திரைகள் தொழில்படும். ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் ஆகியன தன் மாத்திரைகள் ஆகும். தன்மாத்திரைகளில் இருந்து ஐம்பூதங்கள் தோன்றும். இவ்வகையில் கீழிருந்து மேலாகவும். மேலிருந்து கீழாகவும் மாயைகளை வகுத்தறிந்து கொள்ள முடிகிறது.

மொத்தத்தில் ஐம்பூதச் சேர்க்கையாக அமையும் உயிர்களின் உடல் மாயையின் வழிப்பட்டது. அதற்கு அமைந்துள்ள அகப் புறக் கருவிகள் அனைத்தும் மாயையின் வயப்பட்டன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உடல்தான் மாயையின் வயப் பட்டது. உயிர் எனப்படும் ஆன்மாவானது என்றும் அழியாதது. அது மாயை வயப்படுமே அன்றி, அதுவே மாயையாகாது.

இத்தத்துவங்களின் இயல்புகளை உணர்ந்து கொள்ளப் பின்வரும் அட்டவணை உதவும்.

ஐம்பூதங்கள்	பூமி (1)	நீர் (2)	தீ (3)	காற்று (4)	ஆகாயம் (5)
வடிவம்	நாற்கோணம்	மதியின் பாதி	முக்கோணம்	அறுகோணம்	வட்டம்
நிறம்	பொன்	வெள்ளை	சிவப்பு	கருமை	புகை
எழுத்து	ல	வ	ர	ய	ஹ
குறி	வச்சிரம்	தாமரை	சுவத்திகம்	அறுபுள்ளி	அமுதவிந்து
கடவுள்	பிரம்மன்	திருமால்	உருத்திரர்	மகேசுவரர்	சதாசிவர்
தொழில்	தோற்றம்	காத்தல்	அழித்தல்	மறைத்தல்	அருளல்
இயல்பு	கடினம்	குளிர்ச்சி	பற்றிச்சுடும்	பரவும்	ஊடுறுவும்
ஐம்புலன்கள் தன்மாத்திரைகள்	மணம் (6)	சுவை (7)	உருவம் (8)	ஸ்பரிசம் (9)	ஓசை (10)
ஐம்பொறிகள் (ஞானேந்திரியங்கள்)	மூக்கு (11)	நாக்கு (12)	கண் (13)	தோல் (14)	செவி (15)
கன்மேந்திரியங்கள்	கருவாய் (16)	எருவாய் (17)	கைகள் (18)	கால்கள் (19)	வாய் (20)
அந்தக்கரணங்கள்	மனம் (21), புத்தி (22), அகங்காரம் (23), சித்தி (24)				

பாடல் 22

ஆறாறு தத்துவங்களை முறையாகச் சொல்லி முடித்தோம். இனி ஆணவ மலம், கன்ம மலம் பற்றிச் சொல்கிறோம். கேள். உயிர்களுக்கு அறிவை மறைத்து அறியாமையைத் தருவது ஆணவம் ஆகும். கன்ம மலம் என்பது உயிர்களுக்கு இன்ப துன்ப நுகர்ச்சிகளைத் தருவது.

மேலும் நல்வினை, தீவினைப் பயன்களின்படி உயிருக்கு வினைகளைக் கூட்டுவிப்பது. இவற்றைச் சற்று விரித்துக் காணலாம்

ஆணவம்

அறியாமையைத் தருவது ஆணவம் என்று சுருக்கமாக மனவாசகங்கடந்தார் குறிப்பிடுகின்றார். உயிர்கள் அறிவைத் தத்தம் அளவிற்கு ஏற்ற நிலையில் பெற்றுள்ளன. இருந்தாலும் அவற்றுக்குள்ளும் அறியாமை என்பதும் நீக்கமற இருந்தே வருகின்றது. அறிதோறும் அறியாமை என்பது இயல்பு. அறிந்து கொள்ள அறிந்து கொள்ள அறியாமையும் வளர்கிறது. அறிவும் வளர்கிறது. இதுவே உயிர்களின் இயல்பு.

உயிர்களுக்கு அறியாமையை எது வழங்குகின்றது என்று கேள்வி எழுப்பினால், ஆணவம் என்ற பதில் கிடைக்கும். உயிரோடு பொருந்தி நின்று, அதனை மறைத்திருப்பது ஆணவ மலம் ஆகும்.

மறைத்திருப்பது என்பது இரு நிலையில் இடம்பெறு கின்றது. தனிநிலையில் ஆணவம் அறியாமையைத் தருதல், மாயையுடன் கூடி அறியாமையைத் தருதல் என்பன இவ்விரு நிலைகளாகும்.

ஆணவம் தனித்து உயிர்களிடத்தில் இருந்தால் அது கேவல நிலை எனப்படும். மாயையுடன் சேர்ந்து இருந்தால் அது சகல நிலை எனப்படும்.

இவ்விரு நிலைகளிலும் உயிருக்கு மறைப்பாற்றலை வழங்கி அறியாமைக்குள் அழுத்துவது ஆணவம் ஆகும்.

கன்மம்

ஆணவத்தின் காரணமாக உண்டாவது கன்மம் ஆகும். ஆணவத்தின் தூண்டுதலால் உயிரானது உலகப் பொருள்கள் மீது இச்சை கொள்ளும். இச்சையினால் தனக்கு உரிமை இல்லாத பொருள்களிடத்திலும் பற்று கொள்ளும். அகப்பற்று, புறப்பற்று என்று இப்பற்றுகள் இருவகையாக அமைகின்றன. இப்பற்று களை அடையும் முயற்சியே வினை அல்லது கன்மம் எனப் படுகிறது.

இக்கன்ம வினை ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் என மூவகைப்படும். ஆகாமியம் என்பதற்குப் பொருள் விரும்பிச் செய்யப்படும் வினை என்பதாகும். சஞ்சிதம் என்தற்கு நன்கு பெறப்பட்ட வினை என்பது பொருளாகும். பிரார்த்தம் என்பதற்கு நேர்படுவது என்று பொருள்.

இவ்வினைகள் காரணமாக பாவம், புண்ணியம் ஆகியன உயிர்க்கு வந்தடைகின்றன. இவ்வாறு முத்தடைகள் பற்றிய செய்திகளை இந்நூல் வழியாக அறிந்து கொள் ளமுடிகின்றது.

பாடல் 23

எண்ணுதற்கு அரிய பெருமையை உடைய ஆசாரியரே! ஆறாறு தத்துவங்களையும் ஆணவம், கன்மம் ஆகியவற்றை யும் தெளிவாக விளக்கி உரைத்தீர். இவற்றை அறிந்து கொண் டோம். மலங்களுடன் கலந்து வாழும் என்னுடைய நிலையை அதாவது ஆன்மாவின் நிலையை எனக்கு எடுத்துரைக்க வேண்டுகிறேன்.

பாடல் 24

ஆன்மாவின் இயல்பை உனக்கு உணர்த்துகிறேன். கேள். நல்ல சித்தின் முன் அசித்து இங்கு ஒன்றாது - அதாவது தூய அறிவுப் பொருளாகிய சிவத்தின் முன்னே அசித்தாகிய உலக பொருள்கள் நில்லாது.

சிவம் முழு அறிவுப் பொருளாகும். இச்சிவத்திற்கு அசித்தா கிய பாசத்தை அறிய வேண்டிய அவசியமில்லை. பாசம்

அறிவற்ற பொருள். எனவே அதற்கு சிவத்தை அறிந்து கொள்ள வேண்டிய வாய்ப்பே இல்லை. ஆன்மா முழு அறிவுப் பொருளாகிய (சித்தாகிய) சிவத்தை யும், அறிவற்ற பொருளாகிய (அசித்தாகிய) பாசத்தையும் அறிந்து கொள்ள விழைகின்றது. இதன் காரணமாக இவ்விரண்டுடன் ஆன்மா தொடர்புடையதாக அமைகின்றது.

தன் தொடக்கம் காலம் முதலே இறைவனையும், பாசத்தை யும் பொருந்தி அவற்றை அறிய முற்படுவது ஆன்மாவாகும். இதுவே இறைவனுக்கான இலக்கணமும், பாசத்திற்கான இலக்கணமும் ஆன்மாவிற்கான இலக்கணமும் ஆகும்.

பாடல் 25, 26

முப்பத்தாறு தத்துவங்கள் தம்மைத் தான் அறியாதவை ஆகும். செவியானது தன் வலிமையைத் தானே அறியாது. கண்ணானது தன் வலிமையை, இயலாமையை தானே அறியாது. இத்தத்துவங்களை அறிந்து உணர ஒருவர் வேண்டும். அதுவே ஆன்மாவாகும். இனிப்பு, கசப்பு முதலான ஆறு சுவைகளும் தான், சுவை சேர்த்துள்ள உணவுகளில், தான் சேர்ந்துள்ள நிலையை அறியாததைப் போல பிறர் ஒருவரால் அனுபவித்தபின் அறியத் தக்கதைப்போல - தம்மியல்புகளைத் தாமே இத்தத்துவங் கள் அறியாது. ஆன்மா சுவையை உணர்ந்து அதனைச் சுவைத்து இன்புறுவதைப்போல தத்துவங்களையும் உணர ஆன்மா தேவைப்படுகின்றது.

பாடல் 27

ஞானாசிரியரே! ''குன்றாத அருளால் உயிரின் இயல்பினை மாணவனாகிய எனக்கு உணர்த்தினீர்கள். ஆசிரியரான உம்முடைய உண்மைத் தன்மையை அதாவது குருவின் இயல்புகளை எனக்குக் காட்டுக'' என்று மாணவன் அடுத்த வினாவை முன் வைக்கின்றான்.

அதற்கு ஆசிரியர், சூரியனை முன்வைத்து ஒரு உவமை யைக் காட்டி ஞானாசிரியரின் தன்மையைக் காட்டுகின்றார். சூரிய ஒளியானது கண்ணொளியுடன் கூடி அதனின்று வேறாக நின்று,

அக்கண்ணொளியை விளக்கிப் பொருள்களைக் காணும்படி செய்கிறது. அதுபோல யாம் ஆன்மாவாகிய உன் அறிவில் பொருந்தி, வேறாய் நின்று, நீ பொருள்களை அறிந்து வரும்படி செய்கின்றோம் என்றார்.

இவற்றில் சூரிய ஒளி போன்றது இறைவன் கருணை. கண்ணொளி போன்றது உயிரின் இயல்பு. ஆன்மா தானாக எதையும் அறியாது. இறைவன் அறிவிக்கவே ஆன்மா அறியக் கூடியது. சூரிய ஒளி, கண்ணொளியுடன் கலந்துப் பொருளை அறிவிப்பது போல, இறைவன் ஆன்மாவுடன் கூடி அதற்கு விடுதலை தருகின்றான்.

சூரிய ஒளி என்றும் மறையாதது. அதிக ஒளியாற்றல் மிக்கது. அதனில் இருள் என்பதே இல்லை. எனவே அது இறை யாற்றலுக்கு உவமையானது. கண்ணின் ஒளியானது கண்களை மூடினாலோ அல்லது கைகளால் கண்களை மூடினாலோ காட்சியைக் காணவிடாது தடுத்துவிடும். உயிர்களின் நிலையும் அதுபோன்றதுதான். அவை தானாக அறியாது. அறிகின்றபோதும் அவை தடைகளுக்கு உள்ளாகும். இவ்வகையில் இவ்வுவமை மிகப் பொருத்தமுடையதாக அமைகின்றது.

பாடல் 28

இறைவன் உயிருடன் கலந்த ஒன்றாயும், கலப்பில்லாமல் வேறாயும் நிற்கின்றான். இதற்கு ஒரு எடுத்துக்காட்டினை, உண்மை விளக்க ஆசிரியர் தருகின்றார்.

மெய், வாய். கண், மூக்கு, செவி என்றும் ஐம்பொறிகளும் உயிரின் துணையாலேயே தம் தம் புலன்களை அறிகின்றன. அவை புலன்களை அறிவதற்கு உயிர் அவற்றில் பொருந்தி அவையேயாய் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். அவ்வாறு உயிர் கலந்து நிற்காமல் இருந்தால் அப்பொறிகள் ஏதொன்றையும் அறியாது. உயிர் கலப்பதால் பொறிகள் உணர்வதைப்போல இறையாகிய யாம் உனது அறிவினுள் பொருந்தாமல் பொருந்தி நீயேயாய் நின்று உன்னை உணரும்படி செய்து வருவது ஞானாசிரியரின் பணி என்று உரைக்கிறார் ஆசிரியர்.

பாடல் - 29

மேலும், இறைவன் ஆன்மாவுடன் கலந்து நிற்கின்ற நிலையை மற்றொரு எடுத்துக்காட்டின் வழியாக அறிவிக்கிறார் மனவாசகங் கடந்தார்.

''எல்லா எழுத்துகளுக்கும் அகரம் உயிராய் நின்று இயக்கு வதுபோல, எல்லா உயிர்களிடத்திலும் யாம் உயிருக்கு அறிவாய்ப் பொருந்தி நிற்கிறோம். எந்த இடத்திலும் யாம் உடன் நின்று அறிவிக்கவில்லை என்றால் உயிர்களுக்கு அறிவு எட்டாது'' என்று குரு குறிப்பிடுகிறார்.

யாம் என்பது குருவையும் அக்குருவின் வடிவமாக விளங்கும் இறைவனையும் குறிக்கும். எனவே இறைவன் எல்லா உயிர்களிடத்திலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான் என்பது இவ்வுவமையின் வாயிலாகத் தெரியவருகின்றது.

பாடல்.30

நல்ல தவம் செய்தோர் காணும்படி நாதத்தின் முடிவில் திருவைந்தெழுத்தால் திருவுருக்கொண்டு சிவபெருமான் ஆடல் கொள்வான். மெய்கண்ட நாதரே! அத்திருக்கூத்தின் இயல்பை அடியேன் உள்ளவாறு அறியும் வகையில் சொல்லியருள வேண்டும் என்று மாணவன் கேட்கிறான்.

தத்துவங்கள் கடந்த நிலையில், ஆன்மாதான் அவற்றின் வேறாய் நிற்கும். இத்தகைய நிலையில் இறைவனின் திருக்கூத்து அதற்குக் காணக்கிடைக்கும். அக்கூத்தின் பெருமையை உணர்த்த மாணவன் கேட்கின்றான்.

பாடல் 31

எட்டும் இரண்டும் கூடினால் பத்து கிடைக்கும். இதனை தற்கால முறைப்படி எண்ணால் எழுதினால் 10 என்பதாக அமையும்.

தமிழ் எண்ணில் எழுதினால் ''ய'' என்னும் எழுத்தால் குறிக்க வேண்டும். ய என்பது உயிர் என்பதைக் குறிக்கும் எழுத்து வடிவம் ஆகும்.

மேலோனாகிய சிவபெருமான் சிவாயநம என்ற திரு வெழுத்து ஐந்தினைத் திருமேனியாக் கொண்டு உயிர்களின் பிறவித்துன்பம் நீக்கும்படியாக ஆடல் புரிவான். இதில் ய என்ற இடம் உயிர்களின் இருப்பிடமாகும்.

பாடல் 32

நமசிவாய மந்திரத்திலும் இறைவன் நின்றாடுகிறான். அன்பர்கள் நாடும் இறைவனின் திருவடி ''ந'' என்ற எழுத்தில் அமைகின்றது. இறைவனின் வயிறு ''ம'' என்ற எழுத்தில் அமைகிறது.

தோள்களில் ''சி' என்ற எழுத்து இடம் பெறுகிறது. முகம் 'வா' என்ற எழுத்தாக அமைகிறது. திருமுடி ''ய'' என்ற எழுத்தாக விளங்குகின்றது.

ய - இறைவனின் தலைமுடி

வா - இறைவனின் முகம்

சி - இறைவனின் தோள்கள்

ம - இறைவனின் வயிறு

ந - இறைவனின் திருவடி

என்ற அமைப்பில் இறைவனின் தோற்றம் நமசிவாய மந்திரத்தில் அமைகின்றது.

பாடல் 33

சிவாயநம என்ற எழுத்திலும் இறைவன் வீற்றிருக்கிறான். உடுக்கை ஏந்திய கரம் ''சி''கரமாகும். வீசிய கரம் ''வ'' கரம் ஆகும். அஞ்சற்க எனக் காட்டும் அபயகரம் ''ய''காரம் ஆகும். நெருப்பை ஏந்திய திருக்கரம் ''ந''காரமாகும். முயலகனைக் கீழே அழுத்தும் திருவடி ''ம'' காரமாகும்.

சி - உடுக்கை ஏந்திய கரம்

வ - வீசிய கரம்

ய - அபயகரம்

ந - நெருப்பை ஏந்திய கரம்

ம - முயலகனை அழுத்தும் திருவடி

சிவாயநம என்ற திருவைந்தெழுத்திலும் இறைவன் இவ்வாறு விளங்குகின்றார்.

பாடல் 34

இறைவன் ஆடும் தோற்றத்தின் பின்னால் அமைந்துள்ள திருவாசி ஓங்காரமாகும். அத்திருவாசியில் அமைந்துள்ள சுடர்கள் ஓங்காரத்தில் தோன்றி அதனின்று நீங்காமல் உள்ள முதல் எழுத்துகள் ஆகும்.

ஆடல்வல்லானின் இந்நடன இயல்பை யான், எனது என்னும் செருக்கு நீங்கப் பெற்றோரே அறிவர்.. இவ்வாறு இறைவன் ஆடலைக் கண்டவர்கள் இனிப் பிறப்பை அறுத்துக் கொண்டவர்கள் ஆவர்.

பாடல்.35

இறைவனின் நடராச உருவத்தில் ஐந்தொழில்கள் ஆற்றும் தன்மையை இந்தப்பாடல் எடுத்துரைக்கின்றது. உடுக்கையை இயக்குகின்ற திருக்கை, படைத்தல் தொழிலைச் செய்வதாக அமைகின்றது. அதாவது அது இசையை உண்டாக்குகின்றது. எனவே அது படைத்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அபயத் திருக்கரம் காத்தல் தொழிலைச் செய்கின்றது. நெருப்பு ஏந்திய திருக்கரம் அழித்தல் தொழிலை இறைவன் செய்வதற்கான அடையாளம். முயலகன் மீது ஊன்றிய பாதம் மறைத்தல் தொழிலைச் செய்கின்றது. தூக்கிய திருவடி, பிறவியின்று உயிர்களை எடுத்துப் பேரின்பத்தில் வைப்பதாகிய அருளுதல் தொழிலைச் செய்கிறது. இவ்வாறு ஐந்து ஆற்றல் மிக்கவனாக இறைவன் விளங்குகின்றான்.

இவ்வாறு இறைவன் ஆடும் திருக்கூத்து ஊன நடனம், ஞான நடனம் என இருவகைப் படுகின்றது. பிறப்பைத் தருவதற்காக ஆடும் நடனம் ஊன நடனம் ஆகும். பிறவிக் கடலைக் கடந்து வீடுபேறு தருவது ஞான நடனம் ஆகும்.

பாடல் 36

இறைவனால் ஆடப்பெறும் திருக்கூத்தின் இயல்பினை, பயனை இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

உயிர்களிடத்தில் உள்ள மாயா மலத்தை நீங்கச் செய்து, உயிரைத் தொடரும் கன்ம மலத்தைச் சுட்டு ஆணவமலத்தை அடக்கி, பிறப்பு இறப்புகளில் இருந்து எடுத்து அருள் நிலையில் வைத்து கருணையினால் பேரின்பக் கடலில் அழுந்தும்படி செய்வதே இறைவன் ஆடும் திருக்கூத்தின் பயன் ஆகும்.

பாடல் 37

மோனம் ஆகிய கடைநிலையை அடைந்த ஞானிகள், இறைவனின் திருவருளால் மும்மல வாசனை நீக்கப்பெற்றவர்கள் ஆகிறார்கள். யான், எனது என்னும் செருக்கு அழிந்துபோன நிலையில் விளங்கித் தோன்றுகிற சிவானந்தம் ஆகிய அமுதத்தை கண்களால் காணும் பொருட்டு இறைவன் திருச்சிற்றம்பலத்துள் ஆடுகிறான். இதுவே நடராசப் பெருமானின் திருக்கூத்தின் தத்துவமாகும்.

பாடல் 38

வாக்கிற்கும் மனத்திற்கும் அகப்படாத ஒப்பற்ற முதல்வன் இறைவன் ஆவான். இவன் மந்திரங்கள் எல்லாவற்றினுக்கும் மேலானாதாகிய திருவைந்தெழுத்தினுள் ஆடல் கொள்ளுகிறான். அருள் திருமேனி தாங்கி அவ்வருளையே தமக்கு அரங்கமாகக் கொண்டு இறைவன் ஆடுகின்றான். இறைவன் மலையரசன் மகள் உமையம்பிகை காணும்படி ஆடுகின்ற இத்திருக்கூத்தி னைக் கண்டவர்களுக்கு பிறவி இல்லை.

பாடல் 39

ஆசிரியரே! தத்துவங்களைக் கடக்க வைத்து அருள் நடனத் தைக் காணவைத்து எனக்கு அருளினை நன்றாக அருளிச் செய்தீர். எனக்குப் புகலிடமாக விளங்கும் அருளுடைய தேசிகரே, என்னுடைய மலவாசனை நீங்குவதற்கு ஏற்றாற்போல திருவைந் தெழுத்தின் பொருள் நிலையை உள்ளவாறு உணர்த்தி அருள

வேண்டும். இது ஐந்தெழுந்து என்று சொல்லுவதால், மற்ற எழுத்துகள்போல இவ்வெழுத்துகளும் அழியும் தன்மை உடையனவோ என்றும் தாங்கள் எனக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பது இப்பாடல் வழியாக மாணவர் கேட்கும் கேள்வியாகும்.

பாடல் 40

மொழியியல் ஆராய்ச்சியில் மொழிக் கூறுகளுக்குச் சொல்லப்படும் பொருள்கள், அப்பொருள்களுக்கு அமைந்த பெயராகிய குறிகள் கூட ஒரு காலத்தில் அழியலாம். ஆனால் அஞ்செழுத்தின் பொருளும், பெயரும், குறியும் எக்காலத்தும் அழியாது. இதனுள் இருக்கும் பொருள்கள் ஐந்து ஆகும்.

அவை 1. சிவன் 2.திருவருள் 3. உயிர் 4.திரோதன சக்தி, 5. மலம் ஆகியனவாகும். ஐந்தெழுத்து என்பது முப்பொருளையும் உள்ளடக்கி நிற்கின்றது. இறைவனின் திருவருளையும் உட்படுத்தி நிற்கின்றது. மறைப்புச் சக்தியையும் காட்டி நிற்கின்றது.

பாடல் 41

ஐந்து பொருள்களை உடைய ஐந்தெழுத்து மந்திரத்தை ''ந''காரத்தை முதலாக வைத்து ஓதினால், ஓதுவார்க்கு இவ்வுலகத்தில் கிடைக்க வேண்டிய பயன்கள் கிடைக்கும். உலகப் பயனில் நாட்டமில்லாத ஞானிகள் பிறவி நீக்கத்திற்காக ஓதுவதற்குச் சிறந்த ஐந்தெழுத்து ''சி'' காரம் முதலாக உடையது ஆகும்.

நமசிவாய என ஓதினால் உலகப் பயன்கள் கிட்டும். சிவாயநம என்று ஓதினால் பிறவி நீங்கும் வீட்டுப்பயன் கிட்டும்.

நமசிவாய, சிவாயநம என்ற இவ்விரு ஐந்தெழுத்துகளிலும் மூன்று கூறுகள் அடங்கியுள்ளன.

சிவா என்பது ஒரு கூறு.

ய என்பது மற்றொரு கூறு.

நம என்பது பிரிதொரு கூறு.

சிவா என்பது பதியைக் குறிக்கும்.

ய என்பது ஆன்மாவைக் குறிக்கும்.

நம என்பது பாசத்தைக் குறித்து நிற்கும்.

இன்னும் குறிப்பாக அறிவிப்பதானால் சி என்பது சிவனை யும், வா என்பது சிவனது அருட்சக்தியையும் குறிக்கும். ய என்பது ஆன்மாவினைக் குறிக்கும். ந என்பது திரோதன சக்தியையும் ம என்பது ஆணவத்தையும் மற்ற மலங்களையும் குறிக்கும்.

நமசிவாய என்றால் சிவனுக்கு வணக்கம் என்று பொருள் தரும். இம்மொழிக்கு தூல பஞ்சாக்கரம் என்று பெயர்.

சிவாய நம என்றால் உயிர் பாசங்களில் நீங்கித் திருவருள் வழியாகச் சிவத்தை அடைய வேண்டும் என்ற முயற்சியின் பாற்பட்டு அமைகின்றது. இது சூக்கும பஞ்சாக்கரம் எனப்படு கின்றது.

சிவாய என்பது அதிசூக்கும பஞ்சாக்கரம் ஆகும். இது முக்தி பஞ்சாக்கரம் என்றும் பெயர் பெறும்.

இவ்வகையில் ஐந்தெழுத்தின் பெருமைகளை உண்மை விளக்கம் எடுத்துரைக்கின்றது.

பாடல் 42

சிகாரத்தை முன்னதாக வைத்து திருவைந்தெழுத்தை இரவு பகல் கருதாது எந்நேரமும் எண்ணிவந்தால் அருளானது உயிருக்குப் பொருந்தும். மல இருள் நீங்கும். இவ்வைந்தெழுத்து, ஆன்மாவின் கேவல சகல நிலைகளை நீக்கி ஆனந்த உருவத்தை உடைய சிவத்தின் கண்ணே ஆன்மாவைச் சேர்ப்பிக்கும்.

பாடல் 43

'ந' கரத்தையும், மகரத்தையும் முதலாகக் கொண்டு உச்சரித்தால் மும்மலமும் நீங்கி உயிர் அருளைப் பொருந்திப் பேரின்ப வாழ்வைப் பெறமாட்டாது. அதற்கு மாற்றாக 'சி'' காரத்தை என்று விதிப்படி ஓதினால் அளவிடற்கரிய பேரின்ப மாகிய வீட்டில் நிலைத்து வாழுகின்ற பெருமையை அடைய

லாம். உயிரானது இம்மைப்பயன் அடைய வேண்டுமானால், நமசிவாய எனச் சொல்ல வேண்டும். மறுமையில் பயன் வேண்டுமானால், பிறவி நீங்க வேண்டுமானால் சிவாயநம எனச் சொல்ல வேண்டும்.

உண்மை விளக்கத்தின் ஆசிரியர் மனவாசகங்கடந்தார் சிவாய நம என்ற மந்திரத்தையே உயிர்கள் சொல்ல வேண்டும் என்று விரும்புகின்றார். அனைத்து உயிர்களையும் பிறவி நீக்கம் அடைய, முக்தி நிலைக்கு அழைத்துச் செல்ல, அவர் மனம் கனிந்து இந்நூலைப் படைத்தளித்துள்ளார்.

பாடல் 44

சிவ ஆகமங்களும், வேதங்களும் திருவைந்தெழுத்தின் பொருளையே விளக்குகின்றன. ஆனந்தத் தாண்டவத்தை நினைவிற்குக் கொண்டுவருவதும் ஐந்தெழுத்தே. முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டதாய் அமைவது ஐந்தெழுத்தே. மோனநிலையைத் தலைப்பட்டு எய்தும் பரமுத்தி நிலையை அடைவிப்பதும் திருவைந்தெழுத்தே ஆகும்.

இதுவே திருவைந்தெழுத்தின் சிறப்பும் நிறைவும் ஆகும்.

பாடல் 45

இப்பாடல் ஆன்மாக்களை முக்தி அடையச் செய்யும் வழியைத் தொடங்கி வைக்கின்றது.

முக்தி நிலை என்பது இறையோடு ஒன்றிப் பிரியாது இணைந்து நிற்கும் நிறைநிலையாகும். இத்தகு நிலைக்குச் சில உவமைகளை இப்பாடல் எடுத்துரைக்கின்றது. சித்தாந்த நூல்களில் காட்டப்படும் உவமைகள் திட்பமும் நுட்பமும் வாய்ந்தவை. இப்பாடலில் நான்கு உவமைகள் காட்டப்படு கின்றன. இதற்கு முன்னால் இந்நூலில் கூறப்பட்ட உவமை களும், இந்நூலில் தற்போது காட்டப்படும் உவமைகளும் சொல் சிறப்பு, பொருள் சிறப்பு, தத்துவச் சிறப்பு கொண்டவை.

பழத்தில் சுவை போலவும், பூவில் மணம் போலவும், நெருப்பில் வெம்மை போலவும், வீணையில் இன்னிசை

போலவும் முக்தி நிலையில் முக்திப் பேற்றை அடைந்த ஆன்மாவும் இறையும் இணைந்து நிற்பர். இந்நிலைக்கு அத்துவித நிலை என்று பெயர். ப

முத்தில் இருந்து சுவையைப் பிரிக்க முடியாது. பூவில் இருந்து மணத்தைப் பிரிக்க முடியாது. நெருப்பில் இருந்து வெம்மையைப் பிரிக்க இயலாது.

வீணையில் இருந்து இசையைப் பிரிக்க முடியாது. அது போன்று முக்தி நிலை வாய்க்கப்பெற்றால் அந்நிலையில் இருந்து இணைந்திருக்கும் ஆன்மாவையும் இறைவனையும் வேறு வேறாகப் பிரிக்க முடியாது.

பாடல் 46

ஆன்மாவிற்கு இருநிலைகள் உண்டு. ஒன்று கட்டுநிலை. மற்றது முக்தி நிலை. கட்டுநிலையில் ஆன்மா பாசத்துடன் இணைந்து பிரியாமல் நிற்கின்றது. அதுபோல முக்தி நிலையில் ஆன்மா இறையோடு பிரிப்பில்லாமல் நிற்கின்றது என்று சித்தாந்தப் பொருள் கொண்டே இங்கு ஒரு உவமையை உருவாக்குகின்றார் இவ் வாசிரியர்.

கட்டுநிலையில் ஆன்மாவானது முப்பத்தாறு தத்துவங்களில் இருந்து வேறாகி நிற்காது. அதுவே தானாக நிற்கின்றது. இந் நிலை போலவே முக்தி நிலையில் ஆன்மா ஆண்டவனைப் பிரிந்து நிற்காது. இணைந்தே நிற்கும்.

பாடல் 47

மற்றொரு உவமையும் முக்திநிலைக்குக் காட்டப் படுகின்றது. பொழுது விடிந்தபின் சூரியன் வானில் பேரொளி பரப்புகின்றது. அப்போது நிலவும் தன்னொளியுடன் விளங்கு கின்றது என்றாலும், சூரிய ஒளிக்குள் சந்திரனின் ஒளி அடங்கி நின்றுவிடுகிறது. இதுபோன்று இறைவன் திருவடியை அடைந்த ஆன்மாக்கள் தன்னிலை அடங்கித் தான் சிறிதும் தோன்றாது இறையின்பத்தில் மூழ்கி நிற்பர். இறையின்பத்தில் அடங்கி நிற்பர்.

பாடல் 48

முக்தி நிலைக்கு ஆட்பட்ட உயிரின் இயல்பின்னயும், இறையியல்பினையும் மேலும் இப்பாடல் விரித்துரைக்கின்றது,

முக்தி நிலையில் ஆன்மாவானது சிவத்தைச் சென்று சேரும் என்று முக்தி நிலைக்கு விளக்கம் தந்தால் சிவம் எல்லா இடத்திலும் நிறைந்த பேரறிவுப் பொருள் என்ற கருத்துக்கு இடமில்லாமல் போய்விடும். எல்லா இடத்திலும் இருக்கும் பொருள் ஆன்மாவில் முக்தியைத் தரும் காலம் வரை இல்லாமல் இருந்ததா என்ற சந்தேகம் ஏற்படும்.

சிவம் சென்று ஆன்மாவைச் சேரும் என்ற கருதினால் சிவமும் ஆன்மாவும் வேறு வேறாக இருந்ததா என்ற சந்தேகம் எழும். எக்காலத்தும் சிவம் ஆன்மாவை விட்டுப் பிரியாமல் இருக்கும் என்ற சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கை இதனால் குறைவுபட்டதாக ஆகிவிடும்.

பின் எவ்வாறு முக்தி நிலையை விளக்குவது என்றால், அதற்கும் ஒரு உவமை கொண்டு பதிலளிக்கின்றார் மனவாசகங் கடந்தார்.

ஒருவருக்குக் கண்பார்வை மறைப்பு ஏற்படுகிறது. அக்குறைபாட்டை நீக்க அவர் மருத்துவரை நாடுகிறார். மருத்துவர் அவர் கண்ணில் உள்ள படலத்தை அறுவைச் சிகிச்சை செய்து நீக்குகிறார். கண்பார்கை் குறைவுடையவர் அறுவைச் சிகிச்சைக் குப்பின் உடன் பார்வை பெற்றுவிடுவதைப் போல ஆன்மாவும் இறைவனும் முதலில் தடைபட்டு இருந்து மறைப்பு நீங்கியதும் இயைந்து நிற்கிறார்கள்.

ஆன்மாவிற்குள் உள்ள சிவனை பாசம் மறைக்க, முக்தி கிடைக்காமல் காலம் சென்றுவிடுகிறது. ஆனால் பாசம் என்ற மறைப்பு ஆன்மாவில் இருந்து விலக உடன் முக்தி கிடைத்து விடுகிறது.

இவ்வளவில் ஆன்மாவிற்கும், இறைக்கும் இடையே முக்தித் தொடர்பு அமைகின்றது.

பாடல் 49

முக்தியில் முப்பொருள்கள் எந்நிலையில் இருக்கும் என்று மாணவர் தன்னுடைய அடுத்த கேள்வியை எழுப்புகிறார்.

சிவ வடிவமாக விளங்கும் குரு முதல்வரே! இறை, பசு, பாசம் ஆகிய மூன்று பொருள்களும் அழியாத நித்தியப் பொருள் என்று தாங்கள் கூறுகிறீர்கள். முக்தி நிலையில் இம்முப் பொருள்கள் எவ்வாறு இருக்கும் என எனக்கு விளக்குக.

பாடல் 50

முக்தி நிலையில் மூன்று பொருள்களும் இருக்கும் நிலையை உனக்கு உரைக்கிறேன் கேள்.

முக்தியிலும் முப்பொருள்களும் நித்தியமாகவே இருக்கின் றன. முக்தி நிலையில் ஆன்மாவானது பேரின்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும்.

ஆன்மாவிற்கும் அழிவு என்பதே இல்லை. இறைவன் பேரின்ப நுகர்ச்சியைத் தடையில்லாமல் ஆன்மாவிற்கு வழங்கிக் கொண்டே இருக்கிறான் எனவே இறைசக்தியும் நித்தியமாகவே இருக்கும். ஆணவ மலம் மறைத்தலைச் செய்யாது அடங்கி அதுவும் அழியாமலே இருக்கும்.

பாடல் 51

ஆசிரியரிடத்தில், முக்தியை அடைவதற்கு உரிய நிலையான வாயில்கள் யாது என்பதை அருள் கூர்ந்து செப்பிடவேண்டும் என்று கேட்கிறார் மாணவர்.

அதற்கு ஆசிரியர், குரு, லிங்க, சங்கம வழிபாடே முக்திக்கு உரிய வாயில்கள் என்கிறார். இம் மூன்று வாயில்களில் ஏதேனும் ஒன்றினைப் பற்றி இறைவனைக் கண்டு வழிபடுபவர்கள் கருவில் பொருந்தி மீளவும் பிறக்க மாட்டார்கள். அவர்களுக்குப் பிறவித் துன்பமே கிடையாது.

இம்மூன்று வாயில்கள் பற்றி விரிவாக அறிந்து கொள்ள வேண்டும். பின்வரும் பகுதி அதற்கு உதவுகின்றது.

குருவழிபாடு

முப்பொருள்களின் இயல்பினை உணர்த்தி, கட்டுகளில் இருந்து ஆன்மாவை விடுவித்து, மெய்ப்பொருளாகிய சிவனிடத்து அன்பை உண்டாக்கி, சிவபெருமானது திருவடியினை ஆன்மாவைப் பற்றிக் கொள்ளச் செய்பவரே குரு ஆவார். குரு வடிவமே சிவவடிவம் என உணர்ந்து அதனையே முற்றும் வணங்கினால் முக்தி கிட்டும்.

இலிங்க வழிபாடு

இலிங்கம் என்பது கோயில்களின் உள்ளே இருக்கும் திருமேனி ஆகும். இத்திருமேனிகளைச் சிவமாக எண்ணி வழிபடுவோர் மனதில் சிவமாக இறை தோன்றும்.

சங்கம வழிபாடு

திருநீறு, தாழ்வடம், சடைமுடி, கல்லாடை ஆகியவற்றை அணிந்து சைவ நினைப்புடன் வாழும் தொண்டர்களை வழிபடுவது சங்கம வழிபாடு ஆகும்.

இம்மூன்று வழிபாடுகளை நிகழ்த்தி முக்தி பெற இயலும் என்று இப்பாடல் உணர்த்துகிறது.

பாடல் 52

ஞானத்தைத் தந்த குருவையும், திருக்கோயிலில் உள்ள லிங்கத்தையும், சிவவேடம் கொண்ட அடியார்களையும் கண்டால் உடன் சென்று அணைந்து கசிந்து உருகும் அன்பர்கள் முக்தி நிலைக்கு உரியவர்கள் ஆவர்.

அண்மையில் கன்றை ஈன்ற பசுவானது, எவ்வாறு தான் ஈன்ற கன்றை நினைந்து உருகுமோ அதுபோல முக்தி அடைபவர்கள் குருவை, லிங்கத்தை, சிவவேடத்தைக் கண்டால் உருகுவர். அன்பு பாராட்டுவர். இதுவே முக்திக்கான அடையாளம் ஆகும்.

பாடல் 53

இப்பாடல் இதுவரை அருளுடன் பதிலளித்த ஞானாசிரியருக்கு நன்றி தெரிவிக்கும் பாடலாக இப்பாடல் அமைகின்றது.

திருவெண்ணெய் நல்லூரில் சுவதேனப் பெருமாள் என்ற பிள்ளைத் திருநாமத்தை உடைய மெய்கண்ட நாதரே! யான் உம்மிடத்தில் சிவஞானம் பெற்றேன். நான் முற்பிறவியில் செய்த பெறும் பேறு காரணமாக நான் சிவஞானத்தைப் பெறும் இவ்வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

வற்றாத பாவக்கடலில் நான் வீழ்ந்து துன்புறாமல், வருந்தாமல் வாழ்வதற்கு குருவின் மொழிகளே இணையடிகளே காரணம். இதற்காக உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

குருவையே சிவமாகக் கருதி, அவரின் அருள் மொழிகளே முக்திக்கான வழியாக எண்ணி அதனைப் பின்பற்றும் அடிப் படையில் உண்மை விளக்கம் என்ற இந்நூல் செய்யப் பெற்றுள்ளது.

படிப்போர் அனைவருக்கும் மெய்கண்டதேவர் குருவாக நின்று இறையருள் கூட்டுவிப்பார். அறியாமையை நீக்கி முற்றறிவை நல்குவார். முக்தி நலம் அருளுவார். ஞான நடம் காண வைப்பார். வீடு பேறளித்து பிறவி நீக்கம் செய்தருளுவார்.

○

நூல் பதிப்பு வரலாறு

இந்நூல் சொற்சுருக்கம், பொருட்பெருக்கம் உடையது என்பதால் இந்நூலுக்கு உரையின்றிக் கற்பது சற்று சிரமத்தைத் தரும் என்ற அடிப்படையில், இந்நூலுக்கு பல்வேறு உரையாளர் கள் உரை வரைந்து பதிப்பித்துள்ளனர்.

சைவ சித்தாந்த சாமஜமும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் பழைய உரையோடு இந்நூலைப் பதிப்பித்துள்ளன.

1958ஆம் ஆண்டில் க. வச்சிரவேல் முதலியார் இந்நூலுக்கு ஒரு விரிவுரை வரைந்துள்ளார். இதனை தருமையாதீனம் வெளி யிட்டது. இப்பதிப்பு செம்மை செய்யப்பெற்று 1972 ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் வெளியிடப் பெற்றது.

1960ஆம் ஆண்டில் இந்நூலுக்கு ஆ. ஈசுவர மூர்த்திப் பிள்ளை என்பவர் ஒரு புத்துரையை வரைந்துள்ளார்.

இந்நூலுக்கு அமைந்த குறிக்கத் தகுந்த உரை, தொண்டை மண்டல ஆதீன குரு மகாசந்நிதானம் சிவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் எழுதிய உரையாகும். இவ்வுரை சாத்திரப் பயிற்சி பெற்றோருக்கு அரிய தத்துவ விசாரணையாக அமையத்தக்கதாகும்.

1979ஆம் ஆண்டில் கு. சுந்தரமூர்த்தி எழுதிய உரையை காசிமடம் வெளியிட்டது.

1987ஆம் ஆண்டில் ந.ரா. ஆடலரசு அவர்கள் உண்மை விளக்கம் நூலுக்கு விளக்கக் கட்டுரை வடிவில் தர, அதனை சென்னை தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றம் வெளியிட்டது.

இவை தவிர, உண்மை விளக்கம் நூல் ஆங்கில ஆக்கமும் பெற்றுள்ளது. ஜே.எம்.நல்லசாமி பிள்ளை, கொ.நீ. சிங்காரவேலு, டி.என். இராமச்சந்திரன் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விளக்கமும் தந்தள்ளனர்.

சிந்தாந்தச் சரபம் சி.சு. மணி, சிவத்தமிழ்ச்செல்வர் ஆ. ஆனந்தராசன் ஆகியோரும் இந்நூலுக்கு உரை வரைந்துள்ளனர். இந்நூல்களை திருநெல்வேலி அருள் நந்திசிவம் புத்தக நிலையம் வெளியிட்டுள்ளது.

முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் உரையாசிரியராக இருந்து வெளியிட்டுள்ள சைவ சித்தாந்த சாத்திரங்கள் என்ற நூலில் இந்நூலுக்கும் உரை காணப்பெற்றுள்ளது.

திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக கு.வைத்தியநாதன் அவர்கள் உரை வரைந்துள்ள உண்மை விளக்கம் பகுதியும் குறிக்கத் தக்கது.

இவ்வகையில் பற்பல உரைகாரர்களால் உரை வரையப் பெற்ற சாத்திர நூலாக இந்நூல் விளங்குகின்றது.

○

நூலில் உள்ள சிறப்பான நூறு வரிகளும் அவற்றின் பொருள்களும்

காப்புச் செய்யுள்

"வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மைவிளக்கம் "

உண்மை விளக்கம் என்ற இந்நூல், சிவ ஆகம நூல்களில் உணர்த்தப்பெற்ற பாசம், பசு, பதி என்ற முப்பொருள்களின் இயல்புகளைக் குற்றம் குறையின்றி எடுத்துரைக்கும் வள்ளன்மை உடையது. இப்பாடலடி உண்மை விளக்கம் என்ற நூலுக்கான பெயர்க்காரணத்தை எடுத்துரைப்பதாக உள்ளது.

பாடல். 1

பொய்காட்டிப் பொய் அகற்றிப் போதானந் தப்பொருளாங்
மெய்காட்டும் மெய்கண்டாய்!

சித்தாந்த தத்துவத்தில் இறையே குரு வடிவமாக வருவார் என்பது உறுதியான கருத்தாகும். அவ்வகையில் இந்நூலில் ஞானகுருவாக வரிக்கப்படுபவர் மெய்கண்டார். அவரைக் குருவாக வரித்துக் கொண்டவர் மனவாசகங்கடந்தார். ஞான குருவின் இயல்பினை மேற்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

மாயை ஆகிய பொய்யைக் காட்டி, பாசமாகிய பொய்ப் பொருளை அகற்றி தூய அறிவாகவும், பேரின்பமாகவும், மெய்ப் பொருளாகவும் விளங்கும் இறைவனைக் காட்டும் மெய்கண்ட தேவர் எம் குரு என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். மெய் காண்பவர் குரு என்றும் பொருள் கொள்ளலாம்.

பாடல். 2

ஆறாறு தத்துவம் ஏது? ஆணவம் ஏது? அன்றே தான்
மாறா வினை ஏது? மற்று இவற்றின் -- வேறு ஆகா

நான் ஏது? நீ ஏது? நடம் அஞ்செழுத்துத்
தான் ஏது? தேசிகனே! சாற்று

இப்பாடல் முழுவதும் முக்கியமான அடிகளைக் கொண்டுள்ளது. இவ்வொரு பாடலே இந்நூலின் முழு வடிவமைப்பை நிர்ணயிக்கும் பாடலாக உள்ளது. இப்பாடலில் இடம்பெறும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதாக அமைவதே உண்மை விளக்கம் நூல் ஆகும்.

இப்பாடல் வழியாக பெறப்படும் கேள்விகள் பின்வருமாறு

- ஆறாறு தத்துவம் ஏது?
- ஆணவம் ஏது?
- அன்றே தான் மாறா வினை ஏது?
- மற்று இவற்றின் -- வேறு ஆகா நான் ஏது?
- நீ ஏது?
- நடம் ஏது?
- அஞ்செழுத்துத் தான் ஏது?

என்று கேள்விகளை அடுக்கி இப்பாடல் விடைகளைத் தேடிக் கண்டறியச் செய்கின்றது.

பாடல். 4

நாற்கோணம் பூமிபுனல் நண்ணும் மதியின்பாதி
ஏற்கும் அனல் முக்கோணம் எப்போதும் -- ஆக்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாயம் ஆம் இவற்றால் உற்று

இப்பாடலில் இடம்பெற்று உள்ள ஆன்மா உறு காயம் ஆம் இவற்றால் உற்று என்ற அடி மிகச் சிறப்பானது.

ஒவ்வொரு ஆன்மாவிற்கும் ஒவ்வொரு உடல் அமைகின்றது. இந்த உடலானது ஐம்பூதச் சேர்க்கையால் அமைவதாகும். ஆன்மா

எடுக்கும் உடலானது ஐம்பூதச் சேர்க்கையினால் அமைவது என்கிறது உண்மை விளக்கம்.

பாடல். 5

பொன்பார் புனல்வெண்மை பொங்கும் அனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம் -- என்பார்
எழுத்து லவரய அப்பாராதிக்கு என்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது.

இப்பாடல் ஐந்து பூதங்களுக்கும் உரிய நிறத்தை எடுத்துரைக்கின்றது. அதே நேரத்தில் ஐம்பூதங்களுக்குமான எழுத்துக்களையும் எடுத்துரைக்கின்றது,

மண் - ல

நீர் - வ

நெருப்பு - ர

காற்று - ய

வான் - ஹ

என்ற நிலையில் எழுத்துக்களை வரையறை செய்து உண்மை விளக்கம் தன் கருத்தில் வலிமைபட நிற்கின்றது.

பாடல். 8

படைப்பன் - அயன் (மண்)

அளிப்பன்- பங்கயக்கண் மாயன் (நீர்)

துடைப்பன் - உருத்திரனும் (நெருப்பு)

திரோபவிப்பர் - ஈசர் (காற்று)

சதாசிவரும் அன்றே - அநுக்கிரகர் ஆம். (வான்)

ஐம்பூதங்களின் அடிப்படையில் ஐந்தொழில்களை ஏற்படுத்தி, அவற்றிற்கு உரிய தெய்வங்களை இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

உயிர்களைப் படைக்கும் தொழிலைச் செய்பவர்- பிரம்மா

உயிர்களைக் காத்தல் தொழிலைச் செய்பவர்- திருமால்

உயிர்களை அழிக்கும் செயலைச் செய்பவர் -உருத்திரன்

உயிர்களுக்கு மறைப்பாற்றலை வழங்குபவர்- ஈசர்

உயிர்களுக்கு அருளும் தொழிலைச் செய்பவர் - சதாசிவர்

இவ்வாறு ஐந்து பூதங்களின் அடிப்படையில் ஐந்து தொழில்கள் முக்கியமானதாக விளங்கி, ஐந்து தெய்வங்கள் இத்தொழில்களைச் செய்துவரும் நிலையை உண்மை விளக்கம் எடுத்தியம்புகின்றது.

பூமி விளைச்சலைத் தரும் என்பதால் அது படைக்கும் தொழிலுக்கு இடமானது.

நீர் உயிர்களைத் தாகம் முதலானவற்றில் இருந்து காப்பதால் காக்கும் தொழிலுக்கு நீரில் கிடக்கும் திருமால் கடவுளானார்.

நெருப்பு அழித்து நீராக்கும் என்பதால் உருத்திரர் அத்தொழில் இயற்றுபவரானார்.

காற்று எங்கும் பரவி நிற்பதால் அது மறைத்தல் தொழிலுக்கு இடமாகி ஈசர் அதன் தெய்வமானார்.

வானம் அருளுதல் தொழிலுக்கு வாய்ப்பாக அமைந்தது. அதன் கடவுள் சதாசிவரானார்.

பாடல். 10

உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்
கள்ளம்மிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில் -- மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே ஆம்

இந்தப் பாடலில் ஐம்புலன்களுக்கு கள்ளம் மிகும் ஐம்புலன், ஆசை தரும் ஐம்புலன் என்ற இரு குறிப்புகள் இடம் பெற்றுள்

என. இவற்றின் வழியாக ஐம்புலன்களே உயிர்களிடத்தில் ஆசையை, கள்ளத்தை மிகுவிக்கின்றன என்பது தெரிய வருகிறது.

பாடல். 13

நன்றாக நீர் இடமாக நாஇரதம் தான் அறியும்
பொன்றா மணம்மூக்கும் பூ இடமா -- நின்று அறியும்
என்று ஓதும் அன்றே இறை ஆகமம் இதனை
வென்றார் சென்றார் இன்ப வீடு.

இப்பாடலில் உள்ள ''இதனை வென்றார் சென்றார் இன்பவீடு'' என்பது குறிக்கத்தக்கப் பகுதியாகும். ஞானேந்திரியங் களான மூக்கு, நாக்கு, கண், தோல், செவி ஆகியனவற்றை உலகப் பற்றுகளில் செல்லவிடாதபடி அடக்கிய ஞானிகளே பேரின்ப வீட்டை அடைவர் என்று குறிப்பிடப்படுகிறது.

பாடல். 14

கண்நுதல் நூல் ஓதியிடும் கன்மேந்திரியங்கள்
எண்ணும் வசனாதிக்கு இடமாக -- நண்ணியிடும்
வாக்குப் பாதம்பாணி மன்னு குதம் உபத்த
மாக்கருதும் நாளும் அது.

கன்மேந்திரியங்களை வரிசையாக உணர்த்தும் பாடல் இதுவாகும். வாய், கால், கை, எருவாய், கருவாய் என்பன கன் மேந்திரியங்கள் ஆகும்.

பாடல். 15

வாக்கு ஆகாயம் இடமா வந்து வசனிக்குக்கால்
போக்கு ஆரும் காற்று இடமாப் புல்கி அனல் – ஏற்கும்
இடும்பை குதம் நீர் இடமா மலாதி
விடும்பார் இடம் உபத்தம் விந்து.

இப்பாடல் கன்மேந்திரியங்கள் செயல்படும் முறையை விளக்குகின்றது.

பாடல். 16

அந்தக் கரணம் அடையவே உரைக்ககேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் -- சிந்தை இவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்கு
உற்றது சிந்திக்கும் உணர்.

அந்தக் கரணங்களின் வரிசையை இப்பாடல் சொல்லி, அவற்றின் இயல்புகளையும் சுருங்கிய சொற்களால் இப்பாடல் சொல்லி முடிக்கின்றது.

பற்றியது, நிச்சயித்து, பல்கால் எழுந்திருந்து, அங்கு உற்றது சிந்திக்கும் என்ற இவ்வடி அந்தக்கரணங்களான மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியனவற்றின் செயல்முறைகளை விளக்குகின்றது.

பற்றியது- பொறிகளால் அறியப்பட்டதை மனம் பற்றும்

நிச்சயித்து- மனம் பற்றியதைப் புத்தி இன்னது என நிச்சயிக்கும்

பல் கால் எழுந்திருந்து- அகங்காரம் என்பது நான் இதனைச் செய்வேன் என பல்கால் முயலும்

அங்கு உற்றது சிந்திக்கும்- இவ்வாறு அறியப்பட்டதைச் சித்தம் மேலும் சிந்திக்கும்

இவ்வடிப்படையில் அந்தக் கரணங்கள் செயல்படும் என்பதை எளிமை. சுருக்கம், செறிவு ஆகியன கொண்டு இப் பாடல் விளக்குகின்றது.

பாடல். 17

ஓதியிடும் நால் ஆறும் உற்று ஆன்ம தத்துவம் என்று
ஆதி அருள்நூல் அறையும்காண்

நான்கும் ஆறும் ஆகிய இருபத்து நான்காக மேலே சொல்லிய அனைத்தும் ஆன்ம தத்துவங்கள் ஆகும். இப்

பாடலின் வழி இருபத்துநான்கு தத்துவங்களுக்கு ஆன்ம தத்துவம் என்ற பெயர் தரப்பெற்றுள்ளது.

பாடல். 18

காலம்நியதி கருதும் கலைவித்தை
ஏல அராகம் புருடனே மாயை – மால் அறவே
சொன்னோம் அடைவாகச் சொன்ன இவை தம் உண்மை
உன்னி உரைக்க நாம் உற்று

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை ஆகியன வித்தியா தத்துவங்கள் என்று இப்பாடல் காட்டு கின்றது,

பாடல். 19

எல்லை பலம் புதுமை எப்போதும் நிச்சயித்தல்
அல்லல் தரும் கிரியை ஆன்மாவுக்கு –– ஒல்லை
அறிவு ஆசை ஐம்புலனும் ஆரவரும் காலம்
குறியா மயக்கு என்று கொள்.

இப்பாடலில் வித்தியா தத்துவங்களின் செயல்கள் சுருக்க மான முறையில் எடுத்துக்காட்டப்பெறுகின்றன.

காலம்- இப்பாடலில் உள்ள எல்லை,பலம், புதுமை என்ற சொற்கள் முறையே இறந்த, நிகழ், எதிர் காலத்தை உணர்த்துவன. இம் முக்கால நிலைகளில் உயிர்க்கு உரிய வினைகள் யாவை என நிர்ணயிப்பது காலம் என்ற தத்துவம் ஆகும்.

நியதி- வினைப்பயனை அதனைச் செய்த உயிரே அடையும் படி செய்வது நியதி என்ற தத்துவம் ஆகும்.

கலை - ஆன்மாவுக்கு அல்லல் தரும் கிரியை என்று இதற்கு இப்பாடல் விளக்கம் தருகின்றது. உயிர்களுக்கு அல்லல் தரும் செயலாற்றலைச் சிறிதே விளங்கச் செய்வது கலை என்ற தத்துவம் ஆகும்.

வித்தை - ஒல்லை அறிவு என்ற விளக்கத்தை இத்தத்துவம் பெறுகின்றது. விரைந்து ஞானத்தை அறியச் செய்வது வித்தை தத்துவமாகும்.

அராகம் - ஆசை என்ற ஒரு சொல்லே அராகத்தின் விளக்க மாக அமைகின்றது. விழைவாற்றலை இது விளங்கச் செய்யும்.

புருடன் - ஐம்புலனும் ஆர வரும் காலம் என்று இதனை இந்நூல் விளக்கம் செய்கின்றது. ஐம்புலன்களையும் கொண்டு அவற்றால் அனுபவங்களை நுகர்வது புருடன் என்பதாகும்.

மாயை - குறியா மயக்கு என்பதே மாயைக்குத் தரும் விளக்க மாகும்.

மயக்க நிலையைத் தருவது மாயை ஆகும்.

பாடல். 20

வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள் – நித்தமாம்
சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம்நல்
சத்திசிவம் காண் அவைகள் தாம்.

சுத்த தத்துவங்களின் பெயர் முறைகளை இப்பாடல் எடுத்தி யம்புகின்றது. சுத்தவித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் என்பன சுத்த தத்துவங்கள் ஆகும். இதனைச் சிவதத்துவங்கள் என்றும் அழைக்காலம்.

பாடல். 21

சுத்தவித்தை ஞானம்மிகும் தொன்மையாம் ஈசுரம்தான்
அத்தன் தொழில் அதிகம் ஆக்கிடும் –– ஒத்த இவை
சாதாக்கியம் என்றும் சத்தி சிவம் கிரியை
ஆதார ஞான உரு ஆம்.

சிவதத்துவங்களின் இயல்பினை இப்பாடல் எடுத்துரைக் கின்றது.

சுத்த வித்தை

இத்தத்துவத்தில் ஞானம் மிகும். இறைவனது ஞானசக்தி மிகுந்து, கிரியா சக்தி குறைந்து தொழிற்படுவது சுத்த வித்தை யாகும்.

ஈசுரம்

இத்தத்துவத்தில் அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும். இறைவனது கிரியா சக்தி மேம்பட்டு, ஞானசக்தி அடங்கி நிற்கும் இடம் இதுவாகும்.

சாதாக்கியம்

இத்தத்துவ இயல்பினை ஒத்தலிவை என்று குறிப்பிடுகிறது இந்நூல். ஞானசக்தியும் கிரியா சக்தியும் ஒத்து இணைந்து நிகழும் நிலைக்கு நிலைக்களமாக இத்தத்துவம் அமைகின்றது.

சக்தி

கிரியைகளின் ஆதார உருவாக அமைவது சக்தி தத்துவம் ஆகும்.

சிவதத்துவம்

ஞான ஆதார உருவம் சிவதத்துவம் ஆகும்.

பாடல். 22

ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலம் இரண்டும் வாசொல்லக் – கூறில்
அறியாமை ஆணவம் நீ ஆன சுகம் துக்கம்
குறியா வினை என்று கொள்.

இப்பாடல் இந்நூலின் குறிக்கத்தக்க பாடலாகும். அறியாமை - ஆணவம் என்று ஆணவத்திற்கு ஒரே சொல்லில் விளக்கம் தருகின்றது.

குறியா வினை எனப்படும் கன்மம் இன்ப துன்பங்களை உயிருக்கு வழங்குவது

இவ்வாறு முப்பொருள்களுக்கு, மாயைக்கு முப்பத்தாறு தத்துவங்களைக் காட்டிய இந்நூல், ஆணவத்திற்கும், கன்மத்திற்கும் ஆன செய்திகளை ஓரிரு சொற்களில் சொல்லி அவற்றை எளிமையாகப் புரிந்து கொள்ள வைக்கின்றது.

பாடல். 23

ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
மாறா அருளால் வகுத்துரைத்தீர் -- வேறு ஆகா
என்னை எனக்கு அறியக் காட்டீர் இவை கண்டேன்
உன்னரிய தேசிகரே! உற்று

நான் யார் என்ற கேள்விக்கே அத்தனை சமயம் சார்ந்த தத்துவங்களும் விடை தேடிக்கொண்டிருக்கின்றன. அவ்வகையில் நான் யார் என்ற கேள்வியை மிக அடக்கமாக என்னை எனக்குஅறியக் காட்டீர் என்று இப்பாடல் விளம்புகின்றது,

பாடல். 24

நன்றா உரைக்கக்கேள் நல்ல சித்தின் முன் அசித்து இங்கு
ஒன்றாது சித்து அசித்தை ஓராது -- நின்று இவற்றை
அன்றே பகுத்து அறிவது ஆன்மாவே என்றுமறை
குன்றாமல் ஓதும் குறித்து.

நான் யார் என்ற கேள்விக்கு உரிய பதிலை இப்பாடல் முன் வைக்கின்றது.

நல்ல சித்தின் முன் அசித்து ஒன்றாது
சித்து அசித்தை ஓராது
இவற்றைப் புகுத்து அறிவதே ஆன்மா

என்ற பகுதி ஆன்மாவின் இயல்புகளை எடுத்துரைப்பதாகும்.

சித்து என்பதன் பொருள் அறிவு என்பதாகும். பேரறிவு உடையவன் இறைவன். அவன் முன்னே அறிவில்லாத உலகப் பொருட்கள் எதிர்ப்பட்டு நிற்காது

அறிவான பொருளான இறைவன் அறிவற்ற பொருள்களான உலகப்பொருள்களை அனுபவிக்காது.

அறிவில்லாத உலகப் பொருள்களுடன் வேறுபாடு இல்லாமல் கலந்து பழகி நிற்பது ஆன்மா. ஞானம் கைவரப் பெற்ற போது உலகப்பொருள்களை விடுத்து அறிவுப்பொருளான இறைவனை நாடுவது ஆன்மா. அறிவற்ற பொருள், அறிவான பொருள் என்ற இரண்டுடன் தொடர்புகளைக் கொண்டு அவற்றுடன் பழகி அவற்றின் வேறுபாட்டை அறிந்து கொள்வது ஆன்மாவாகும்.

பாடல். 25

தத்துவங்கள் ஆறாறும் தம்மைத்தாம் என்று அறியா

ஆறாறு தத்துவங்கள் எனச் சொல்லப்படுபவை தம்மைத் தாம் அறிந்து கொள்ளாத இயல்பின. அவை ஆன்மாவோடு கூடியபோதே ஆன்மாவால் அறியத்தக்கன.

பாடல். 27

குன்றா அருளாலே கூறினீர் என்வடிவு
பொன்றாத நும் உருவம் போதியீர் -- நின்று அருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே உனது அறிவில்
நண்ணி அறிவித்திடுவோம் நாம்.

இப்பாடலில் குருவின் வடிவம் பற்றி மாணவர் வினா எழுப்புகிறார். அதற்கு சூரிய ஒளி, கண்ணொளி இரண்டும் இணைந்து பொருள்களைக் காணச்செய்வதுபோல, குருவானவர் ஆன்மாவின் அறிவில் பொருந்தி ஞானத்தை அறிவிக்கின்றார் என்று குருவின் இலக்கணம் எடுத்துரைக்கப்படுகிறது.

பாடல். 28

உன்னை உணர்த்துவோம் உன் அறிவில்
மேவாமல் மேவி நாமே.

குரு ஆன்மாவின் அறிவில் மேவாமல் மேவி, அதன் இயல்பை உணர்த்தும் ஆற்றல் மிக்கவர் என்று இப்பாடலடி விளக்குகின்றது.

பாடல். 29

– எக்கண்ணும்
நில்லா இடத்து உயிர்க்கு நில்லாது அறிவு

என்ற இந்தப் பாடலடி, ஆசிரியர் துணையின்றி அவர் உடன் நின்று அறிவிக்காதபோது உயிர்க்கு அறிவானது கிடைக்காது என்று உறுதிபட மொழிகின்றது.

பாடல். 30

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்சு எழுத்தால்
உற்று உருவாய் நின்று ஆடல் உள்ளபடி –– பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே!
தண்ணார் அருளாலே சாற்று.

நற்றவத்தோர் காணும் இறைவனின் திருக் கூத்தினை உள்ளபடி சொல்ல இப்பாடல் வேண்டுகின்றது.

பாடல். 31

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக் கேள் –– சிட்டன்
சிவாயநம எனும் திரு எழுத்து அஞ்சாலே
அவாயம் அற நின்று ஆடுவான்.

உயிர்களின் பிறவித் துன்பம் நீங்க, சிவாயநம என்னும் ஐந்தெழுத்தில் இறைவன் நின்றாடுவான் என்று இப்பாடலடி குறிக்கின்றது.

பாடல். 32

ஆடும்படி கேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் – கூடும்

மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம் வாமுடியப் பார்.

தில்லை அம்பலவாணர் நமசிவாய என்ற மந்திரத்தில் திருவடி - ந, வயிறு-ம, தோள்-சி, முகம்-வா, முடி- ய என்ற நிலையில் நின்று ஆடுகின்றார்.

பாடல். 33

சேர்க்கும் துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் -- பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரம் அதுதான்.

சிவயநம என்ற மந்திரத்தில்

உடுக்கை ஏந்திய கரம்	-	சி
வீசுகரம்	-	வா
அபயகரம்	-	ய
அங்கி ஏந்தியகரம்	-	ந
முயலகனை அழுத்துவது	-	ம

என்று நின்று ஆடுகிறார் இறைவர்.

பாடல். 34

ஓங்காரமே நல் திருவாசி

ஓம் நமசிவயா, ஓம் சிவாய நம என்று பிரணவ மந்திரத்துடன் இவ்வைந்தெழுத்துகளை ஓதலாம் என்கிறது உண்மை விளக்கத்தின் இப்பாடலடி.

இறைவன் ஆடும் ஆடலின் பின் உள்ள திருவாசி ஓங்கார வடிவம் ஆகின்றது.

எனவே ஓங்காரத்துடன் ஐந்தெழுத்தினைச் சொல்ல வேண்டும் என்பது தெரிய வருகிறது.

பாடல். 35

தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் -- ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

இறைவன் நடராசத் திருவுருவத்தில் ஐந்தொழில்களையும் ஆற்றுகிறான் என்கிறது இப்பாடல்.

உடுக்கை (துடி) இசைக்கும் கரம்– தோற்றமாகிய தொழில்
அமைந்த திருக்கையில் காத்தல் தொழிலையும்
அங்கி வைத்துள்ள கையில் அழித்தல் தொழிலையும்
முயலகன் ஊன்றி பாதத்தின் வழியாக மறைத்தல் தொழிலையும்
தூக்கிய திருவடியில் அருளல் தொழிலையும்

இறைவன் ஆற்றுகிறான் என்று இப்பாடல் குறிப்பிடு கின்றது.

பாடல். 36

மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தான் எடுத்து -- நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான் எந்தையார் பரதம் தான்.

இறைவன் திருக்கூத்து ஆடுவதற்கான காரணத்தை இனிமை பட இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

மாயா மலத்தை நீக்கி, வல்வினையாகிய கன்மமலத்தைச் சுட்டு, மூலமலமாகிய ஆணவத்தை அதன் ஆற்றல் கெடும்படி அடக்கி, ஆன்மாவை எடுத்து, பெருங்கருணையால் பேரின்பக் கடலில் அழுத்துதல் என்பதே இறைவன் திருநடனம் புரிவதன் நோக்கமாகும்.

பாடல். 37

மோனந்த முனிவர் மும்மலத்தை மோசித்துத்
தான் அந்தமானிடத்தே தங்கியிடும் -- ஆனந்தம்
மொண்டு அருந்தி நின்று ஆடல் காணும் அருள் மூர்த்தியாக்
கொண்ட திரு அம்பலத்தான் கூத்து

இறைவன் ஆடும் திருக்கூத்தின் இயல்பினை இப்பாடல் மேலும் விரித்துச் சொல்லுகின்றது. உயர்ந்த ஞானிகள் மும்மல வாசனையை அறவே நீக்கி, யான் என்னும் செருக்கு அழித்து, சிவானந்தம் ஆகிய அமுதத்தைக் கண்களால் மொண்டு அருந்தும் பொருட்டு இறைவன் ஆனந்தத் திருக் கூத்தை ஆடுகிறான்.

பாடல். 38

கருணை உருக்கொண்டு ஆடல்
பேணு வார்க்கு உண்டோ பிறப்பு.

இறைவனின் ஆனந்த நடனத்தைக் காண்பவர்களுக்கு பிறப்பு என்பதே இல்லை.

பாடல். 40

உற்ற குறி அழியும் ஓதும்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது -- மற்றது கேள்
ஈசன் அருள் ஆவி எழில் ஆர் திரோதமலம்
ஆசு இல் எழுத்து அஞ்சின் அடைவு ஆம்.

திருவைந்தெழுத்தானது அழியாத் தன்மை உடையது. மற்ற எழுத்துகள் போல இது அழிவது இல்லை. சிவன், திருவருள், ஆன்மா, திரோதனசக்தி, மலம் ஆகியன இவ்வைந்தெழுத்துள் காணப்படுவனவாகும்.

பாடல். 41

நம்முதலா ஓதில் அருள் நாடாது நாடும் அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று

நமசிவாய என்ற மந்திரத்தைச் சொன்னால் இம்மையில் பயன் கிடைக்கும். சிவாயநம என்று சொன்னால் மறுமையில் பயன் கிடைக்கும். .

பாடல். 42

அண்ணல் முதலா அழகு ஆர் எழுத்து ஐந்தும்
எண்ணில் இராப்பகல் அற்று இன்பத்தே -- நண்ணி
அருளானது சிவத்தே ஆக்கும் அணுவை
இருளானது தீர இன்று.

சிவாய நம என்ற மந்திரத்தை இரவுபகல் பாராமல் சொன்னால் சிவனருள் கிட்டும். இருளான ஆணவ மலம் கழியும்.

பாடல். 43

-போதம்
மதிப்பு அரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படி ஓது அஞ்செழுத்துமே.

சிவாயநம என்ற மந்திரத்தை ஓதினால் பேரின்ப வீட்டில் வாழலாம்.

பாடல். 44

அஞ்சுஎழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்சுஎழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் -- அஞ்சுஎழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக்கு அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

திருவைந்தெழுத்தின் சிறப்பினை இப்பாடல் எடுத்துரைக் கின்றது.

அஞ்செழுத்தே ஆகமங்கள் கூறும் பொருள்.
அஞ்செழுத்தே அருமறைகள் உணர்த்தும் பொருள்.
அஞ்செழுத்தே ஆதி புராணங்கள் காட்ட விரும்பியதும்.

அஞ்செழுத்தே ஆனந்தத் தாண்டவம்
அஞ்செழுத்தே முப்பத்தாறு தத்துவங்கள் கடந்து பரமுத்தி தருவது

பாடல். 45

முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போது அங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின் -- ஒத்த
இரதம்மணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர் என்று ஓதும் விதி.

முக்தி நிலை என்பது, இறைவனுடன் ஆன்மா இணைந்து நிற்கும் நிலையாகும்.

ஆன்மா இறைவனுடன் பழம், பூ, நெருப்பு, வீணை இவற்றில் சுவை, நாற்றம், வெம்மை, இசை ஆகியன இணைந்திருப்பதைப் போல ஆன்மாவும் இறைநிலையும் இணைந்து நிற்கின்றன.

பாடல். 46

தத்துவங்கள் எல்லாம் சகசமாக ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் – முத்திதனில்
சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடும் தான்.

முக்தி நிலையில் ஆன்மாவானது இறைநிலையுடன் இயைந்து நிற்கும்.

அது எதுபோல என்றால், முற்காலத்தில் அதாவது பாசம் கழியா நிலையில் ஆன்மாவானது ஆறாறு தத்துவங்களுடன் இணைந்து இருப்பதைப் போன்றதாகும். இதனில் இருந்து ஆன்மா ஆறாறு தத்துவங்களுடன் இணைந்து நிற்கும். அல்லது முக்தி நிலையில் ஆண்டவனுடன் இணைந்து நிற்கும்.

ஆன்மாவனாது ஏதாவது ஒன்றைப் பற்றி நிற்கும் என்பது தெரிய வருகிறது.

பாடல். 47

ஆதவன் தன் சன்னிதியில் அம்புலியின் ஆர்சோதி
பேதம் அற நிற்கின்ற பெற்றிபோல் -- நாதாந்தத்து
அண்ணல் துரிவடியில் ஆன்மா அணைந்து இன்பக்
கண்ணில் அழுந்தியிடும் காண்.

சூரிய ஒளி முன் நிலவின் ஒளி அடங்கி நிற்பதுபோல முக்தி நிலையில் இறையாற்றலின் முன் சுத்த ஆன்மா அடங்கி நிற்கும்.

பாடல். 48

சென்று இவன் தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்
அன்றுஅவன் தான் ஒன்றுமெனில் அன்னியமாம் –
இன்றுஇரண்டும்
அற்ற நிலை ஏதுஎன்னில் ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றம் அற நின்றதுபோல் கொள்.

இப்பாடல் சிந்தாந்த அடிப்படையை விளக்கும் பாடலாகும். முக்தி நிலை என்பது ஆன்மா இறைவனைச் சென்று சேர்வதா? அல்லது இறைவன் ஆன்மாவை வந்து அடைவதா? என்ற சந்தேகம் மாணவருக்கு எழுகின்றது. இரண்டும் இல்லை. கண்ணில் உள்ள மறைப்புப் படலம் நீங்கினால் எப்படி கண்ணுக்கு உடன் பார்வை கிடைக்குமோ, அதுபோன்றது முக்தி நிலை என்கிறது இப்பாடல்.

பாடல். 49

நீக்காப்
பதியினைப் போல் நித்தம் பசுபாசம் என்றாய்
கதியிடத்தும் மூன்றினையும் காட்டு

இப்பாடலடிகள் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் எக்காலத்தும் அழியாத பொருள்கள் என்பதை உணர்த்தி நிற்கின்றது. இவை அழியாத பொருள்கள் என்றால் முக்தி நிலையில் இவை எவ்வாறு அமையும் என்று மாணவர் வினா எழுப்புகிறார்.

பாடல். 50

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்த அனுபோகத்தைத் தூய்த்தல் அணு -- மெத்தவே
இன்பம் கொடுத்தல் இறை இத்தை விளைவித்தல் மலம்
அன்புடனே கண்டுகொள், அப்பா!

முக்தி நிலையில் இறையின்பத்தை நீங்காமல் ஆன்மா நுகர்ந்து கொண்டிருக்கும்.

இறையானது சிவ அனுபவத்தை இடையறாமல் ஆன்மா விற்கு வழங்கிக் கொண்டிருக்கும்.

ஆணவம் என்ற மூலமலம் அடங்கி நிற்கும்.

பாடல். 51

அப்பா! இம்முத்திக்கு அழியாத காரணம்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் -- ஒப்புஇல்
குருலிங்க வேடம் எனக் கூறில் இவை கொண்டார்
கரு ஒன்றி நில்லார்கள் காண்.

முக்தி நிலை பெறுவதற்கான வாயில்கள் யாவை என மாணவர் வினவ, அதற்கு ஆசிரியர் குரு, லிங்க, சங்கம வழி பாடே சிறந்த வழிகள் என்று ஆசிரியர் உணர்த்துகிறார். இவை ஒன்றில் நின்று முக்தி பெற்றவர்கள் பிறவாமை என்ற பெரும் பேற்றை அடைவார்கள்.

பாடல். 52

கற்றா மனம்போல் கசிந்துகசிந்தே உருகி
உற்று ஆசான் லிங்கம் உயர்வேடம் -- பற்று ஆக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்.

தற்போது பெற்றெடுத்த கன்றினை நினைத்து எவ்வாறு அன்பும் அருளும் ஒரு தாய்ப்பசுவிற்குச் சுரக்குமோ அது போல

குரு,லிங்க, சங்கம வழிபாட்டை அன்பும் அருளும் கொண்டு செய்தால் மலவாசனை நீங்கும். பேரின்பமாகிய முக்தியைப் பெறலாம்.

பாடல். 53

வாழ்ந்தேன் அருட்கடலே! வற்றாப் பாவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில் – சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே!
உண்மைத் தவப்பயனே உற்று.

பாவக்கடலில் வீழாமல், அலையாமல், முன் செய்த தவப்பயனால் குருவாகிய உங்கள் கருணைக்கு ஆட்பட்டேன். இதன் காரணமாக வாழ்ந்தேன் என்னும் பேறு பேற்றேன். இத்தகைய அருள் நிலைக்கு என்னைக் கூட்டுவித்த தங்கள் கருணைக்கு மிக்க நன்றிகள்.

இவ்வாறு தான் எடுத்துக்கொண்ட சிவதத்துவங்களை விளக்குதல் என்ற நிலையில் முழுமைபட நின்று இந்நூல் விளக்கமளித்துள்ளது.

☆